விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 03 திங்கட்கிழமை (19.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 212

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஈழத்தமிழருக்கு 2 வருடத்தில் 2 இலட்சம் வீடுகள்

# ராஜீவ் கூறியதை கேட்டிருந்தால்

# பிரபாகரன் முடிசூடா மன்னன்



## இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், ராஜீவ்காந்தி கூறியபடி இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அவர் முடிசூடா மன்னனாக இருந்திருப்பார். இவ்வாறு இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## குருணாகலையில் பிக்கு படுகொலை

(கொழும்பு)

குருணாகல் மாவட்டத்தின் ஹெட்டிபொல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் வைத்து புத்த பிக்கு ஒருவர் நேற்று முன்தினம் இரவு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

விகாரைக்குள் அத்துமீறி பிரவேசித்த மர்மநபர்கள் அவரைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விரைவில் இந்தியா விஜயம்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ அழைப்பை ஏற்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்வார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விஜயத்தின் போது இந்தியப்பிரதமர் உள்ளிட்ட பல்வேறு தரப்புடனும் சந்திப்பை மேற்கொள்ளவிருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை நேற்றையதினம் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கியதேசியக்கட்சியில் பிரதித்தலைவர் கருஜெயசூரியா ஆகியோரின் கட்சியின் தலைமையுடன் முரண்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.கூ-மு.காங்கிரஸ் நாளை முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் அவசர சந்திப்பு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், அரசமைப்புதிருத்தம், வடக்கு-கிழக்கு மாகாணங்களின் மீள் இணைப்பு என்பன உட்பட தமிழ்பேசும் சமூகங்களின் அன்றாட, அடிப்படைப் பிரச்சினைகள் ஆகியன குறித்து இப்பேச்சுக்களின்போது பரஸ்பரம் பேசப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் மீள் இணைப்புத் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.என்.ஹரிஸ் தெரிவித்துவரும் கருத்துக்கள் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் அதிருப்தியை இச்சந் (20ஆம் பக்கம் பார்க்க)

## வேலூர் சிறையில் சீமான்-முருகன்

(சென்னை)

தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள சீமானை, ராஜீவ்காந்தி கொலைவழக்கில் இதே சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள முருகன் சந்தித்து பேசியுள்ளார்.

சீமானை சந்தித்த முருகன், அரசியல் நிலைப்பாடு, வெளிநாடுகளில் கிடைக்கும் ஆதரவு போன்றவற்றை கேட்டுத் தெரிந்து கொண்டுள்ளார்.

கூடவே தங்களது விடு தலைக்காக குரல் கொடுக்க வேண்டும் (20ஆம் பக்கம் பார்க்க)

# ஹெகலிய சிந்தனையிலா இந்த நாடு இயங்குகின்றது!

## அரியநேத்திரன் எம்.பி. கேள்வி

(கொழும்பு)

இந்த நாட்டின் செயற்பாடுகள் மகிந்த சிந்தனையின் அடிப்படையிலா? அல்லது ஹெகலிய றம்புக்வெலவின் சிந்தனையின் அடிப்படையிலா? முன்னெடுக்கப்படுகின்றன என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட எம்.பி. பா.அரியநேத்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தாந்தாமலை பிரதேசத்தில் அவர் மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போதே அவர் இக் கேள்வியை எழுப்பினார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு,

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள அதியுயர் இராணுவ பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக குறைக்கப்படும் என்றும் அங்கிருந்து இராணுவங்கள் மீளழைக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்வை தோற்றுவிக்கப்படும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சந்தித்தபோது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாக்குறுதி (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் தமிழர் பிரச்சினையை திசை திருப்ப கலைஞர் முயற்சியாம்!

## வை.கோபாலசாமி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தமிழர் பிரச்சினையை மீண்டும் திசைதிருப்பும் நோக்கிலேயே அந்நாட்டுக்கு சிறப்புத் தூதர் ஒருவரை அனுப்ப வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி கூறியுள்ளார் என்று ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ குற்றஞ் சாட்டியுள்ளார்.

இலங்கைக்கு சிறப்புத் தூதுவர் ஒருவரை அனுப்பவேண்டும் என்று வலியுறுத்தி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு தமிழக முதலமைச்சர் நேற்றுமுன்தினம் கடிதம் ஒன்றை எழுதி இருந்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று நெல்லையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அபிவிருத்தித் திட்டங்களில் சீனக் கைதிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

## கொழும்பு வார ஏடு தகவல்

(கொழும்பு)

சீன சிறைக் கைதிகள் இலங்கை அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபட்டுள்ளதாக சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. சீனாவில் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் இலங்கையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படு கிறது.

குறிப்பிட்ட ஹம்பாந்தோட்டை துறைமுக திட்டம் போன்றவற்றில் பணியாற்றும் பெரும்பான்மையான சீனத் தொழிலாளர்கள் அந்நாட்டில் தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதிகள் என சுட்டிக்காட்டப்படுகிறது.

எனினும் பெரும் (20ஆம் பக்கம் பார்க்க)

# ரணில், விமல் கோமாளிகள் நடிக்கும் நாடகமே அரசியலமைப்புத் திருத்தம்

## அனுரகுமார திஸநாயக்க எம்.பி. கிண்டல்



ரணில் மற்றும் விமல் வீரவன்ச கோமாளிகளாகக் கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடத்துகின்ற நாடகந்தான் அரசியல் அமைப்பு என நாடாளுமன்ற அங்கத்தவர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

புதிய அரசியல் மாற்ற முன்னெடுப்புக்கள் தொடர்பாக கண்டியில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்று சுயாதீன ஆணைக்குழுக்கள் செயலிழந்துள்ளன. இந் நிலையில் வெகு விரைவாக 17-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை சமர்ப்பிக்க வேண்டிய நிலை உண்டு.

இதைவிட்டு விட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையைக் கொண்டு வர எதிர்க்கட்சித் தலைவர் ஆதரவு தெரிவித்துள்ளதாகக் கூறி வேறு ஒரு நாடகம் நடத்தப்படப் போகின்றது.

எதிர்க்கட்சிகள் நிறைவேற்றுப் பிரதமர் முறைக்கு ஆதரவு என்பது அப்பட்டமான பொய்யாகும். அதற்கு ரணில் விக்கிரமசிங்க இன்னும் இணங்கவில்லை.

அப்படியாயின் ரணில் இணங்கியது என்ன தெரியுமா? நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறை கொண்டு வருவது பற்றிப் பேசவே அவர் இணங்கியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவும் கருஜெயசூரியவும் ஜோசப் மைக்கல் பெரேராவும் சேர்ந்து இலங்கைக்கான அரசியல் அமைப்பை மாற்ற முடியாது.

அதற்குத் துறைசார்ந்த நிபுணர்கள் கூடியுள்ளனர். அவர்களைக் கொண்டு வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டு அது நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின் நீதிமன்ற அனுமதி உட்பட செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன.

உடனடியாக 17-வது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும். பொதுச் சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு எனப் பல ஆணைக்குழுக்களும் ஆணையாளர்களும் சுயாதீனமாக இயங்க முடியும்.

இன்று அவர்கள் ஜனாதிபதியில் தங்கியுள்ளனர். ஒவ்வொரு இரண்டு வாரத்திற்கு ஒருமுறையும் நாடாளுமன்றச் செயலாளர் நியமிக்கப்படுகின்றார்.

காரணம் ஜனாதிபதியால் நாடாளுமன்றச் செயலாளரை இரண்டு வாரத்திற்கே நியமிக்க முடியும். எனவே இரு வாரத்திற்கு ஒருமுறை அவருக்குப் புதிய திகதியிட்ட கடிதம் வழங்கப்படுகின்றது.

சுயாதீன ஆணைக்குழு இருப்பின் இந் நிலை தோன்றாது. இது எமது நாடாளுமன்றத்தில் நடக்கின்ற கோமாளிக் கூத்தல்லவா? இவ்வாறான கூத்துக்கு இரண்டு கோமாளிகள் அல்லது ஜோக்கர்கள் இருப்பதாக அவர் கூறினார். (ந-5)

## வெப் தள வடிவமைப்புக்கான கனடிய நிறுவன கற்கைகள்

கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட ZEND(PHP) நிறுவனம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் தொழில் வாய்ப்புக்களைத் தேடுவோர் தாமாகவே Out sourcing ஊடாக உலகின் எப்பாகத்திலிருந்தும் தொழில் வாய்ப்பைப் பெறக் கூடியதும் ஏனையோர் மேலதிக வருமானம் பெறக் கூடியதுமான கற்கை நெறியான வெப்தள வடிவமைப்பு பொறியியலாளர் கற்கை நெறிகளை யாழ். எம்.சி.எஸ். தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

பதிவுகளை 24 ஜூலை 2010ற்கு முன்னர் இல.324, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள எம்.சி.எஸ். தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மூன்றாம் உலக மகா யுத்தம் தண்ணீரினால் உருவாகலாம்

## டாக்டர் அப்துல் கலாம் ஆருடம்

(சென்னை)

மூன்றாவது உலக மகா யுத்தம் ஒன்று உருவாகுமேயானால் அது தண்ணீரினால்தான் ஏற்படக் கூடிய வாய்ப்பிருக்கின்றது.

தண்ணீர் தட்டுப்பாடு காரணமாகவே இந்த உலக நாடுகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளும் அபாயம் இருக்கின்றது என இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் விஞ்ஞானி அப்துல் கலாம் குறிப்பிட்டுள்ளார்.

சிறுதுளி பெருவெள்ளம் அன்றும் இன்றும் என்ற தலைப்பில் கோவையில் நடைபெற்ற மழை நீர் சேகரிப்புப் பற்றிய கண்காட்சியில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அப்துல் கலாம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில், கடந்த 15 வருடங்களின் முன்னர் பிளாஸ்ரிக் பைக்கெற்றுக்களில் தண்ணீர் விற்பனைக்கு வரும் என நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

ஆனால் இன்று வெளிநாட்டு முதலீட்டுக் கம்பனிகள் எல்லாம் இந்தியாவில் மெனரல் வோட்டர் கம்பனிகளை ஆரம்பித்துள்ளன. இது நாளடைவில் இந்தியக் குடிநீருக்கே ஆபத்தாக முடியும்.

நம்மைச் சுற்றியிருக்கின்ற நாடுகளிலும் தண்ணீர்ப் பிரச்சினையிருக்கின்றது. அந்த நாடுகள் ஆயுத பலமுள்ள நாடுகள். ஆகையினால் எதிர்காலத்தில் இந்தியா மீது தண்ணீர் கேட்டுப் போர் தொடுக்காமல் இருக்கப் போவதில்லை.

இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமானால் நதிகளின் இணைப்பு அவசியம். அரசியல் இலாபத்திற்காக நதிநீர் இணைப்பில் பல சிக்கல்கள் நிலவுகின்றன.



ஆட்சிகள் மாறுகின்றபோது நதிநீர் இணைப்புத் திட்டங்களும் மாறி விடுகின்றன. எனக்கொரு கனவிருக்கின்றது; இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள நதிகளை இணைக்க வேண்டும்.

அதன் மூலம் பல மில்லியன் மக்கள் பயனடைய வேண்டும் என்பதாகும். இக் கனவு நினைவாக வேண்டுமானால் இளைஞர்களால்தான் முடியும்.

தண்ணீர்ப் பாதுகாப்புப் படையணியினை இளைஞர்கள் உருவாக்க வேண்டும். நல்ல இளைஞர்களால்தான் நாளைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றும் அப்துல் கலாம் கூறினார். (ந-5)


Nottingham College Of London
And UNI ICT - Campus
கணனி நிறுவனங்கள்

A/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2010

எமது யாழ் மாவட்ட மாணவர்களது கணனி, ஆங்கிலம், முகாமைத்துவம், மருத்துவம் போன்ற துறைகளின் அறிவை வளர்க்கும் நோக்குடன் கீழ்வரும் சர்வதேச கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு எமது நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. அந்த வகையில் கீழ்வரும் கற்கை நெறிகளை நீங்கள் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றின் மூலம் எமது நிறுவனத்தில் குறைந்த செலவில்கற்கமுடியும். இத்திட்டத்தின் மூலம் ஒருவர் மூன்று கற்கை நெறிகளை தெரிவு செய்து கற்க முடியும்.

Certificate Courses :-
- Certificate in Information Technology
- Certificate in PC Hardware Engineering
- Microsoft Office for Business Professional
- Certificate in PC Network Administration
- Certificate in English

Diploma Courses :-
- Diploma in Marketing
- Diploma in Mobile Phone Repairing
- Diploma in Human Resource Management
- Diploma in Electronic Technology
- Diploma in Multimedia
- Diploma in IT
- Diploma in Hardware Engineering
- Diploma in Business (With Accounting & IT)
- Diploma in Spoken Singala Language
- Professional Diploma in Marketing
- Diploma in Spoken & Practical English & IELTS

உங்கள் நண்பர்களுக்கும் இதை தெரியுங்கள் !!!

எமது இத் திட்டத்தில் இணைய நீங்கள் செய்ய வேண்டியவை?????

- எமது இப்புலமைப்பரிசிலானது பொது அறிவு மற்றும் நுண் அறிவு பரீட்சைகளை கொண்டதாகும்.
- நீங்கள் பெறும் புள்ளிகளின் ஊடாக எம்மால் உங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இன்றே கீழ்வரும் எமது முகவரிக்கு உங்களது முழுப்பெயர், வீட்டு முகவரி, நீங்கள் கற்க விரும்பும் எமது கற்கைநெறியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை தெளிவாக எழுதி கீழே தரப்பட்டுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும். அல்லது மேற்படி உங்கள் விபரங்களை உங்களது கைத்தொலைபேசியில் ரைப்செய்து 078 - 911 4208 என்னும் எமது தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்!!!!! இவ்வாறு அனுப்பிவைக்கும் மாணவர்களுக்கு நாம் இலவசமாக எமது விண்ணப்படிவங்கள், எமது கற்கை நெறிகள் பற்றிய விபரம் மற்றும் எமது புலமைப்பரிசில் நடைபெறும் திகதி ஆகியவற்றை தபாலில் அனுப்பிவைப்போம்.

Higher National Diploma
விண்ணப்ப முடிவுத் திகதி :- 31/07/2010
- Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy for A/L Bio/Maths Students)

Degree Courses :-
- B .A (Hons) in Business Administration
- B.Sc (Hons) in Multimedia

- Conditions for Apply -

Our International Universities Affiliations:-
eie Unitec University of Wales, Newport

அனுப்ப வேண்டிய முகவரி :- UNI & NOTTINGHAM COLLEGE OF LONDON
ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862
(C-705)



### தவறிவிட்டது

துரைராஜா நிக்ஸன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. 861454525 V, விசேட அடையாள அட்டை என்பன 17.07.2010 அன்று திருநெல்வேலிக்கும் கலாசாலை வீதிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர் 115, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்னும் இடத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் உடனடியாக வழங்கப்படும்.

தொடர்பு:-
T.P.:- 021 222 9670
(1880)



28.06.2010 முதல்
அருண் விஜய், பிரபு, கார்த்திக், விஜயகுமார் மற்றும் பலர் நடிப்பில்
மாஞ்சா வேலு
செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00
(C-588)


# பூரான் கடித்து சிறுமி மரணம்

வெள்ளைப் பூரான் கடித்ததால் 5 வயதுச் சிறுமி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். வட மராட்சி கரணவாய் தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த த.பிரவேணி (வயது-5) என்ற சிறுமி யே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு வெள்ளைத்தேளால் தீண்டப்பட்ட இச் சிறுமி பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பயனளிக்காத நிலை யில் நேற்று நண்பகல் இச் சிறுமி உயிரிழந்துள்ளார். (ந-5)


### ஆனந்தி திருமண சேவை

மணமகன் வேண்டும்

அரசில் பணியாற்றும் பட்டதாரி பெண் மணி, 73 இல் பிறந்த, ஆட்சிபெற்ற 8 ல் செவ்வாய், கிரகபாவம் 28 1/2, அத்தம் 2 ம் பாதம், உயரம் 5 1/2 அடி, கவர்ச்சிகர வெண்மை நிறம், மதம் R.C., சீதனம் பேசித் தீர்மானிக்கப்படும். ஏற்ற உள்ளூர் மணமகன் அல்லது வெளிநாடு.

தொடர்புக்கு:- (கடிதம், நேரடியாக, தொலைபேசி- 021 222 8708)

V.A.சிவராசா,
ஜோதிடர், 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(1881)

# இன்று ஒரு தகவல்

## பந்திக்கு முந்து

எனக்குத் தெரிந்த ஒருத்தர் இருந்தார். பல கல்யாண மண்டபங்களில் அவரைப் பார்த்திருக்கிறேன். சாப்பாட்டுப் பந்தியில் முதல் ஆளாக உட்கார்ந்திருப்பார்.

"ஏன் இப்படி?" என்று கேட்டால்.....

"பந்திக்கு முந்து" என்று நம் பெரியவர்களே சொல்லியிருக்கிறார்களே.... அது உனக்குத் தெரியாதா? என்பார். அதற்குப் பின் தான் அதைப்பற்றி நானும் யோசித்துப் பார்த்தேன்.

'பந்திக்கு முந்து – படைக்குப் பிந்து' என்று நிஜமாகவே அந்த அர்த்தத்தில் தான் பெரியவர்கள் சொல்லியிருப்பார்களா?"

விபரம் தெரிந்தவர்களைக் கேட்டேன்.

அது அப்படி இல்லையாம்.

அவர்கள் கொடுக்கும் விளக்கம் என்ன தெரியுமா?

அந்தக் காலத்தில் ராஜாக்களெல்லாம் நான்கு வகையான படை வைத்திருப்பார்களாம்.

யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை.

இந்த நாற்பெரும் படையும் உடைய மன்னன் தான் சிறந்த மன்னன்.

ஒரு ராஜா சண்டைக்குப் போகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த நாலுவகையான படையும் அணிவகுத்துப் போகும். முதலில் யானைப்படை போகும். அதற்கு அடுத்த படியாக குதிரைப்படை போகும். அடுத்தது தேர்ப்படை. அதற்கு அடுத்தது காலாட்படை.

எப்படிப் பார்த்தாலும் முதலில் வருவது யானைப்படை நான்காவதாக வருவது தரைப்படை அதாவது காலாட்படை அந்தக் காலத்தில் போர்ப்பயிற்சி பெற்ற எல்லோரையுமே படையில் வைத்திருப்பதில்லை.

தேவைக்கு அதிகமாக உள்ளவர்களையெல்லாம் பயிற்சி கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். அவர்களெல்லாம் வீட்டுக்குப் போய் அவர்களுக்குரிய தொழிலை செய்து கொண்டிருப்பார்கள்.

பகைவர்கள் படையெடுத்து வருவார்கள். போர் ஆரம்பம் ஆகப் போகிறது என்று தெரிந்தால் அதற்கு அறிகுறியாக போர்ப்பறை முழங்கும். முரசு சத்தம் கேட்கும்.

இந்தச் சத்தம் கேட்டதும் வீட்டில் இருக்கும் வீரர்களெல்லாம் கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஓடி வருவார்கள்.

அப்படி ஓடிவருபவர்கள் படைக்குப் பிந்துவார்கள். அதாவது ஏற்கனவே அணிவகுத்து நிற்கும் யானை – குதிரை – தேர் – இந்த வரிசையில் கடைசியாக இருக்கும் காலாட்படையில் போய் நிற்பார்கள்.

அப்படி நிற்கும் போது அந்தக் காலாட் படையில் முதலில் நிற்பதற்கு ஆசைப்படுவார்கள். அதாவது பந்திக்கு முந்துவார்கள். பந்தி என்றால் வரிசை என்று அர்த்தம். அந்த வரிசைக்கு முந்து என்று தான் அர்த்தம்.

அதனால் 'பந்திக்கு முந்து' என்றால் படை வீரர்கள் வரிசையில் முன்னுக்கு போய் நில் என்று அர்த்தம்.

படைக்குப்பிந்து – யானை, குதிரை, தேர், இந்தபடை அணிவகுப்பில் கடைசியாக இருக்கும் காலாட்படையில் போய் நில் என்று அர்த்தம்.

இவற்றுக்கு அர்த்தம் புரியாமல் நாம் சாப்பாட்டுப் பந்தியில் முண்டியடித்துக் கொண்டு கிடக்கிறோம்.

நம்ம ஆள் ஒருத்தர் இந்த விஷயத்தில் மிகவும் எக்ஸ்பேர்ட் நிபுணர். ஒரு கல்யாணப் பந்தியில் எனக்குப் பக்கத்தில் அவர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

தற்செயலாக நான் திரும்பிப் பார்த்தேன்.

அவர் அழுது கொண்டிருந்தார்.

நான் பதறிப்போய்,

"ஏன் சேர் அழுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"இது அழுகையில்லை சேர்.... ஆனந்தக் கண்ணீர்" என்றார்.

"என்ன விபரம்?" என்று விசாரித்தேன்.

அவர் சொன்னார்:

சேர், நான் எத்தனையோ கல்யாணத்துக்குப் போயிருக்கிறேன். ஆனால் இன்றைக்குத் தான் சேர் சாம்பாருக்குத் தனியாகவும் அப்பளத்துக்குத் தனியாகவும் அப்ப ளம் போடுவதைப் பார்த்தேன்.

2 அப்பளத்தை ஒன்றாகப் பார்த்தும் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். அவ்வளவு தான் என்று சொல்லிக் கொண்டே மேல் துண்டால் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாம் அனைவரும் கடினமாக உழைப்பதன் மூலமே கல்வி வளர்ச்சியை மேம்படுத்த முடியும்

### பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தெரிவிப்பு



நாம் அனைவரும் கடினமாக உழைப்பதன் மூலமே இந்தப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த முடியும் என திருவையாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தளபாடங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாகும். இன்றும் பாடசாலைகளில் அரைவாசிக்கு மேற்பட்ட மாணவர்கள் தளபாடங்கள் இன்றி பாய்களிலும் வெறும் தரையிலும் இருந்து படிக்கும் நிலையினைக் கல்வித் திணைக்கள புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று இந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், காலணிகள், அலுவலக உபகரணங்கள் வாங்குவதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளமை பாராட்டுதலுக்குரிய விடயமாகும்.

எனவே நாம் எல்லோரும் கடினமாக உழைப்பதன் மூலமே இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். மேலும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் கிளிநொச்சி மாவட்டத்தில் தனது காரியாலயத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது எமது கல்விச் சமூகத்திற்கு பெரும் வரப்பிரசாதம் எனவும் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கனகாம்பிகை அ.த.க பாடசாலைக்கும் விஜயம் செய்த அவர் அப் பாடசாலைக்கான தளபாடங்கள் வழங்கும் நிகழ்விலும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் சிறுவர் பாது காப்பு நிதிய முகாமையாளர் ஜெகநாதன், யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், கிளி . உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் உயரதிகாரிகள்பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# கையடக்கத்தொலைபேசிகளுக்கு குறைந்த கட்டணத்தை நிர்ணயிக்க தொலைத் தொடர்புகள் ஆணைக்குழு முடிவு

கையடக்கத் தொலைபேசிகளுக்கு குறைந்த கட்டணமொன்றை நிர்ணயிப்பதற்காக தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மேற்கொண்ட தீர்மானத்தை தொலைபேசி நிறுவனங்கள் பாராட்டியுள்ளன.

இதன்மூலம் தொலைபேசிப் பாவனையாளர்களும் நன்மையடைவார்கள் எனவும் இது காலத்தின் தேவையை நிறைவு செய்யும் ஒரு நடவடிக்கையாகும் என்றும் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வலயமைப்பு மற்றும் சர்வதேச பணிப்பாளரும் இலங்கைப் பொறியியல் நிறுவனத்தின் உபதலைவருமான திலக் டி சில்வா தெரிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களில் நிலவிய பல்வேறு பிரச்சினைகள் இந்தப் புதிய தீர்மானத்தின் காரணமாக தீர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# இராசி பலன்

19.07.2010
(ஆடி3, திங்கட்கிழமை)
அட்டமி முற்பகல் 7.59 மணிவரை
சுவாதி பின்னிரவு 4.50 மணிவரை
இராகுகாலம் 7.31 - 9.01 மணிவரை
சுபநேரம் 12.01 - 1.31 மணிவரை
அட்டமி - நவமி

| | |
|---|---|
| மேடம் | மனோ தைரியம், காரிய நன்மை, பொருள் சேர்க்கை, கலந்துரையாடல். |
| இடபம் | செய்தொழில் விருத்தி, நோய் குணமடைதல், சத்துரு ஜெயம், காரிய நன்மை. |
| மிதுனம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணக்குறைவு, சொத்துப்பிணக்கு. |
| கடகம் | தன்னம்பிக்கைக் குறைவு, உஷ்ண வியாதி, புதியவிடயம், சுபசெலவு. |
| சிங்கம் | சகோதரர் வழி நன்மை, காரிய நன்மை, வாக்கு மேன்மை, பிரயாணம். |
| கன்னி | போசன சுகக்குறைவு, பெரியோர் உதவி, விவாதம், முயற்சி தாமதம். |
| துலாம் | புதிய முயற்சி, தெய்வானுகூலம், போசன சுகம், பிறர் உதவி. |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, எடுத்த காரியம் தாமதமாகும், தந்தை வழி உறவு, சுபசெலவு. |
| தனுசு | தனதானிய சேர்க்கை, பெரியோர் உதவி, உறவினர் வருகை, முயற்சி கைகூடும். |
| மகரம் | தொழில் மேன்மை, நல்ல வரவேற்பு, காரிய சித்தி, விருந்து பசாரம். |
| கும்பம் | உத்தியோக பங்கம், பிரயாணம், தேவையற்ற பயம், பெரியோர் உதவி. |
| மீனம் | எதிர்பாராத பகை, காரிய தடங்கல், வாகன பயம், கௌரவக் குறைவு. |

வளவன்

# கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வடபகுதி பட்டதாரிகளுக்கு பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் பயிற்சிப் பட்டறையொன்று வட பகுதி பட்டதாரிகளுக்காக நேற்று ஆரம்பித்து நடத்தப்பட்டது.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பயிற்சிப்பட்டறையினை மங்கல விளக்கேற்றி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். பட்டதாரிகளுக்கு குறிப்பாக தொழில் வாய்ப்பை எதிர்நோக்கி காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு அவர்களது திறனாய்வு, தொழில் முயற்சிகள் மற்றும் வாய்ப்புகள் குறித்து உரிய அறிவினையும் தகவல்களையும் வழங்கும் முகமாக நடாத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் பங்கு கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உயரதிகாரிகள் ஆகியோர் பங்கு கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 110-140 | 140 |
| தக்காளி | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 70 | 80 |
| கரட் | 140 | 120 |
| பூசணி | 40 | 40 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 |
| பாகற்காய் | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 |
| பயற்றங்காய் | 80 | 80 |
| லீக்ஸ் | 110 | 140 |
| பீற்றூட் | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 140 |
| போஞ்சி | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 |

## உப்புக்குளப் பகுதிகளை புனரமைக்க கோரிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு பிள்ளையார் கோவில் பக்கமாக உள்ள உப்புக் குளத்தின் சுவர்கள் சேதமடைந்த நிலையில் காணப் படுகின்றது.

இதேவேளை மேற்படி குளத்தின் சேதம டைந்த பகுதியை புனரமைக்குமாறும், குளக் கட்டு `அணை சேதமடையும் நிலையில் காணப்படுவதாகவும் யாழ்.மாநகரசபையிடம் கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலை யத்தினர் முறையிட்டுள்ளனர். (6-51)

## கலையரங்கு கட்டும் பணிகள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலையத்திற்கு யாழ்.மாநகரசபை பிரதி முதல்வரின் பணிப்பின் பேரில் கலையரங்கு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

மேற்படி கலையரங்கானது வெகு விரைவில் யாழ்.மாநகரசபையினரால் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (6-51)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தினால்,நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெய் வீக இசையரங்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் இசையரங்கில் பங்குபற்ற விரும்பும் கலைஞர்களை மன்றப் பணிமனையில் இதற்கான படிவத்தைப் பெற்று 28 ஆம் திக திக்கு முன் விண்ணப்பிக்குமாறு நிர்வாகம் தெரிவிக்கின்றது. (6-2)




# இலவசக் கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சுது மலை தெற்கு அம்பாள் விளையாட்டுக் கழகம் மற்றும் அம்பாள் சனசமூக நிலையம் இணைந்து Esoft கணனி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தும் உயர்தர மாண வர்களுக்கான மாபெரும் இலவசக் கருத்த ரங்கு இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் யாழ். மண்ணின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் இடம்பெறவுள்ளது.

இதில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரை தமிழ்மாழி பகுதி I உம், பிற்பகல் ஒரு மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை இந்துநாகரம் பகுதி I உம்,நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரை தமிழ் மொழிபகுதி II , பிற்பகல் 2மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை புவியியல் பகுதி I உம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை அரசியல் பகுதிI ,II, பிற்பகல் 2 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை இந்து நாகரிகம் பகுதி II உம், 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 12 மணிவரை புவியியல் பகுதி II , பிற்பகல் 1.30 மணி முதல் 4.30 மணிவரை அளவை யியல் பகுதி I மற்றும் 23ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை புவியியல் பகுதி III , பிற்பகல் 1.30 மணிமுதல்பிற்பகல் 4.30 மணிவரை அளவை யியல் பகுதி II உம் நடைபெறவுள்ளது.

மேலும் கொழும்பின் பிரபல விரிவுரை யாளர்களின் இலவச கணனிக் கருத்தரங் கும் இடம்பெறும். (6)

# சமுர்த்தி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற் பாட்டில் , ஆரம்ப நிலை, முதல்நிலை , இரண் டாம் கல்வி நிலையிலுள்ள மாணவர்களுக் கான சமுர்த்திப் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் , நூல் வெளியீடு, இன்று காலை 10 மணிக்கு நல்லூர் கோயில் வடக்கு வீதி யிலுள்ள நடராசா பரமேஸ்வரி கல்யாண மண் டபத்தில் சமுர்த்திப் பிரதிப் பணிப்பாளரும், நல்லூர் பிரதேச செயலருமான பா. செந்தில் நந்தனன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக , பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தி னர்களாக பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவரும் , யாழ்.மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினருமான முருகேசு சந்திர குமார் , யாழ்.மாவட்டப் பாராமன்ற உறுப்பி னர் சில்வேஸ்திரி அலென்ரின் , யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் , யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் , தி. மகேஸ்வரகுமார்,யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் , வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் , யாழ்.கல்வி வலய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சண்முக ராசா இர வீந்திரநாதன் ஆகியோர் கலந்து கொள்வார் கள்.

கௌரவ விருந்தினராக தொழிலதிபரும், நடராசா பரமேஸ்வரி கல்யாண மண்டப ஸ்தாபகருமான நடராசா சத்தியரூபன் கலந்து கொள்வார்.

ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் நூல் வெளியீட்டு ரையை யாழ். பல்கலைக்கழக பொருளியல் பேராசிரியர் வி.பி.சிவநாதனும் நிகழ்த்த வுள்ளனர்.

இந்நிகழ்விற்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவு அறிவித்துள்ளது. (6-2)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகரசபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு முன்பள்ளி சிறார்க ளின் வருடாந்த உடல்,உள, உவகை நிகழ் வுகள் சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள யாழ்.மாநகரசபை முன்பள்ளி மைதானத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தின ராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், க.விமலநாதனும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையா ளர் அலுவலக உத்தியோகத்தர்களும் மற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத் தரான திருமதி சு.சந்திராதேவியும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (6-51)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா முன் பள்ளியின் விளையாட்டு விழா இன்று பிற் பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி விளை யாட்டு மைதானத்தில் நடைபெறும்.

முன்பள்ளி பெற்றோர், ஆசிரியர் சங்கத் தலைவர் சி.மதியழகன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் களாக, சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவியுமான திருமதி நவநீதம் ஜெகதீசன், புத்தூர், வலி.கிழக்கு பிரதேச சபை செயலா ளரான த.நடராசாவும் கலந்துகொள்வ துடன் ஸ்ரீ விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத் தலைவர் ஆ.விநாயகமூர்த்தியும் கருகப்பை ஈஸ்வரன் தேவஸ்தானத் தலைவர் மு. இரா சேந்திரமும், மகாத்மாகாந்தி சனசமூக நிலை யத் தலைவர் நீ. சின்னத்தம்பியும், மகாத் மாஜி சனசமூக நிலையத் தலைவர் ஐ. மணி யமும், அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் வை.தயாளனும் சிறப்பு விருந்தினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக, புத்தூர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் க.வைத்திய நாதனும், புத்தூர் கிழக்கு சமுர்த்தி உத்தி யோகத்தர் சி.கேதீஸ்வரனும் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.

இவ்விளையாட்டு விழாவிற்கு அனைவ ரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.(6-2)

# துளிர்கள் நிறுவனத்தின் 6ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 'மின்மினி' குறுந்திரைப்படம் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

துளிர்கள் நிறுவனத்தின் 6ஆவது ஆண்டு நினைவு விழாவும், 'மின்மினி' சமூக சீர்திருத்த குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவும் நாளை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில், துளிர்கள் நிறுவனப் பணிப்பாளர் கே.எஸ்.ரகு தலை மையில் இடம்பெறும்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும்,நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், யாழ்.மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலா நிதி சி.எஸ்.யமுனாநந்தா, யாழ். பல்கலைக் கழக , விவசாய இயந்திரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன், யாழ்.சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் என்.சுகிர்தராஜ், தேசிய கல்வியியற் கல்லூரி, சிரேஷ்ட விரிவுரைய ா ளரும் துளிர்கள் பிரதித் தலைவர் பா.தன பாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக, கியூடெக், கரித்தாஸ் நிறுவனப் பணிப்பாளர் அருட் தந்தை ஜெ. எக்ஸ் பி. றெஸ்னோ அடிகளா ரும், யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி. கேசவனும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறை,விவசாயபீட தலை வர் கலாநிதி கு.மிகுந்தன் நிகழ்த்த, ஏற்பு ரையை கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரி வுரையாளர் கே.கே. ஆர். கமலநாதன் ஆற்றுவார்.

இதில் ஆர்வலர்களை கலந்துகொள் ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின் றனர். (6-2)

## மாகாண மட்ட ஆக்கத்திறன் போட்டியில் முதவிடம்



(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட தமிழ்த்தினப் போட் டியின் பிரிவு I ஆக் கத்திறன் போட்டியில் யா/ கரவெட்டி மாணி க்கவாசகர் வித்தியா லய மாணவன் சிறீஸ்கந்தன் நிரோ ஜன் முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

அத்துடன் வடமராட்சி வலயத்திலிருந்து தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள ஒரேயொரு மாணவன் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல் லூரி முத்தமிழ் விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 8 .30 மணிக்கு கல்லூரியின் கலை அரங்கில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப் பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் கௌரவ விருந்தினராக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் வி.கணேசரா வும் கலந்துகொள்ளவுள்ளனர். (6)

# எழுத்தாளர்களுக்கான கலந்துரையாடல்

கொழும்பில் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 6,7,8,9 ஆம் திகதிகளில் நடை பெற வுள்ள 'சர்வதேச எழுத்தாளர் விழா' தொடர் பான முன்னோடிக் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சுன் னாகம் பொது நூலகத்தில் நூலகர் க.சௌந் தராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் 'சர்வதேச எழுத்தாளர் விழா'தொடர்பான இலங்கைக்கான இணைப் பாளருமான தி.ஞானசேகரன் கலந்து கொண்டு விழா பற்றி விளக்கமளிக்க வுள்ளார்.

இந்நிகழ்வு கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாணம் மற்றும் கரவெட்டிப் பிர தேசங்களில் நடைபெற்ற எழுத்தாளர் கலந் துரையாடல்களின் தொடர்ச்சியாகவே வலி காமத்தில் நடைபெறவுள்ளதாகவும் இந் நிகழ்வில் பங்குபற்றி ஆய்வுக் கட்டுரை களைச் சமர்ப்பிக்க விரும்புவோர்கள் இதில் கலந்து கொண்டு தமது விபரங்களைத் தந்து தவுமாறு சுன்னாகம் வலி- தெற்கு பிரதேச சபை பொது நூலக நூலகர் தெரிவித்துள் ளார். (6)







கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் சி.ஐங்கரன், கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் சி.பாலசுந்தரம் ஆகியோர் செயலாளர் ந.தர்மேந்திரா,நிலையத் தலைவர் எஸ்.தயாநிதி ஆகியோரால் மாலை அணிவித்து அழைத்து வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அதிபர் மு.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் சிறார்களின் அணிவகுப்பு நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதானமையை எதிர்த்து சீமான் வழக்கு



தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட் டமையை எதிர்த்து நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்.

இது குறித்து சீமானின் வழக்கறிஞர் தடா சந்திரசேகரன் கூறுகையில், "எந்த காரணமும் இல்லாமல் சீமானை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்துள்ளனர்.தனிமை சிறையில் அடைத்து அவர் கொடுமைப்படுத்தப்படுகிறார். தமிழக மீனவர்களை பாதுகாக்க வலியுறுத்தி பேசினார் என் பதற்காக அவர் மீது தேசிய பாகாப்பு சட்டம் பாய்கின்றமை கண்டிக்கத்தக்கது.

இந்த சட்டத்தில் சீமானை கைது செய்தமையை எதிர்த்து வழக்கு தொடருவோம். தேசிய பாதுகாப்பு சட்ட மறுஆய்வுக் குழுவிலும் மேன்முறையீடு செய்வோம்.

ஏற்கனவே ஒரு முறை சீமானை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்தபோது அதை எதிர்த்து வழக்கு தொடர்ந்தோம். இரண்டு மாதத்திலேயே அவரை வெளியே கொண்டு வந்தோம்" என்றார். (6)

## அரசாங்கம் ஐக்கிய தேசியக்கட்சியுடன் கூட்டாட்சியை முன்னெடுக்கத்திட்டம்?

(கொழும்பு)

அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு ஆட்சியை முன்னெடுக்கத் திட்டமிட்டு வருவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் சாசனத் திருத்தம் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சு வார்த்தை கூட்டு அரசாங்கமொன்றை உரு வாக்கும் முனைப்புகள் நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிடுவதோடு சர்வதேச உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சியும் இவ்வாறு இணை யக் கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை தாமதப்படுத்தும் சகல வழிமுறைகளையும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொள்வார் என சிரேஷ்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் புரிந் துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தாகவும் இதன் பின்னர் 18 ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுள் ளார். (6-2)

## உயர் கல்வி கற்று காரைநகரில் சேவையாற்ற முன்வரவேண்டும்

### உதவி அரசஅதிபர் கோரிக்கை

காரைநகர் கலாநிதி தியாகராஜ மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்ற ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் மதியம் 12 மணிக்கும் மாணவர் மன்றத் தலை வர் ச.மதுரங்கன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் உரையாற்றும் போது, மாணவர்கள் மனிதர்களாக பக்குவப்படும் நிகழ்வே ஒன்றுகூடல் வைபவமாகும். பாட சாலை பருவமானது அவர்களின் பொற் காலமா கும்.இக்காலத்தில் மாணவர்களது குணங் களில் குறும்புத் தனங்கள் நிறைந்ததாக இருக்கும். ஆனால் அவை அனைத்தும் இன் றைய ஒன்று கூடலுடன் பக்குவப்படுத்தப் பட்டுவிடும்.

எதிர்காலத்தில் பல்கலைக்கழக கல்வி பெற்றாலோ அல்லது ஏனைய உயர் கல் வியில் இணைந்தாலோ மாணவர்களாகிய நீங்கள் காரைநகருக்கு சேவையாற்ற வேண் டும். காரைநகரில் இரு கண்களாக இரு பெரிய கல்லூரிகள் மிளிர்கின்றன.

தற்போது இப்பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்கள் பல பதவிகள் வகித்து காரைநகருக்கு சேவையாற்றுகின்றனர் என்று தனது உரையில் தெரிவித்தார். (6-2-246)

## வால் நட்சத்திர தோற்றத்தில் புதிய கிரகம் கண்டுபிடிப்பு



வால் நட்சத்திர தோற்றத்துடன் புதிய கிர கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது சூரி யன் அருகே ஒரு புதிய கிரகம் இருப்பது தெரிய வந்துள்ளது. இது வால் நட்சத்திரம் போன்ற தோற்றத்துடன் காணப்படுகிறது. இதை நாசா விஞ்ஞானிகள் ஹப்பிள் ஸ்பேஸ் தொலைக் காட்டி மூலம் கண்டுபிடித்துள்ளனர். அதற்கு ஒசிரிஸ் புனைப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இது பூமியில் இருந்து 153 ஒளி ஆண்டு தூரத்தில் உள்ளதெனவும் யூப்பிடர் கிரகத்தை விட சிறியதாகவும் முதன் முதலாக கடந்த 1999 ஆம் ஆண்டு இதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர் என தெரிவிக்கப்பட்டு கிறது.

ஆய்வு மேற்கொண்ட போது விண்வெளி யில் வீசிய பலத்த காற்றின் போது இந்த கிர கம் சூரியனை சுற்றி வருவது தெரிய வந்தது. இது கடுமையான வெப்பத்தை வெளிப்படுத்த கூடியதெனவும் இந்த கிரகத்துக்கு எச்டி 209458 பி என அதிகார பூர்வமாக பெய ரிடப்பட்டுள்ளது. (6-2)




# யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் 3ஆம் நாள் நிகழ்வு










கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் 3ஆம் நாள் காலை நிகழ்வு நேற்று கந்தசாமி அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி மங்கல விளக்கேற்றுவதையும் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் த.தேவராஜா வரவேற்புரையாற்றுவதையும் அதிபர் அ.அகிலதாஸ் வாழ்த்துரை வழங்குவதையும் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ.கமலநாதன் தலைமையுரையாற்றுவதையும் மற்றும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு யாழ்.அரச அதிபர் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

## உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கிளிநொச்சிக்கு விஜயம் செய்யத் திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு கிளிநொச்சிக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளது.

கிளிநொச்சியில் கடமையாற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சந்திப்பொன்றை நடத்த உள்ளதாகவும், பொதுமக்களிடம் நடத்தப்பட உள்ள விசாரணைகள் தொடர்பிலான ஒழுங்குகளை மேற்கொள்ளும் நோக்கில் இந்த சந்திப்பு நடத்தப்பட உள்ளதெனவும், வரும் ஓகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில் பொதுமக்களிடம் விசாரணை நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த காலத்தில் சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பான வகையில் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது குறித்து விரிவாக ஆராயப்படும் எனக் குறிப்பிடப்படுவதுடன், சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் குழுக்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களில் தங்கி வாழ்வோருக்கு நட்ட ஈடுகளை வழங்குவது தொடர்பிலும் பரிந்துரை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## அம்பாறை, ரஜகளை ஆகிய பிரதேசங்களில் புதைபொருள் இடங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

அம்பாறை, ரஜகளைப் பிரதேசத்தில் புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களம் புதைபொருட்களை பெறக்கூடிய பிரதேசம் ஒன்றினை இனம் கண்டுள்ளனர். புதைபொருள் ஆராய்ச்சிக்கு ஆயிரத்து 600 ஏக்கர் அளவிலான விஸ்தீரமான காணி அடையாளமிடப்பட்டு ஆராய்ச்சிப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தின் ஆணையாளர் செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் புதைபொருள் ஆராய்ச்சிப் பணிகள் தற்போது 50 சதவீதம் வரை நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதுடன் இந்தப் பணிகளின் போது புராதன 580 சிலைகள் மற்றும் 40பௌத்த தூபிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அனுராதபுரம் மற்றும் பொலநறுவை ஆகிய புனித பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளுக்குப் பின்னர் அம்பாறையில் மேற்கொள்ளப்படும்பெரியளவிலான புதை பொருள் ஆராய்ச்சிப் பணி இதுவெனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## மக்கள் சபை செயலர் பதவிகளுக்கு இம்மாத இறுதியில் நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

நாடு முழுவதும் மக்கள் சபை செயலாளர்களாக (ஜனசபா) பட்டதாரிகளை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரச நிர்வாக கட்டமைப்பின் ஒரு அங்கமாக மக்கள் சபை செயலாளர் பதவிக்காக இதுவரை 36 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாத இறுதியில் மூன்று கட்டங்களாக நடைபெறுமெனவும் நியமனங்கள் வழங்குவதற்காக நிதி அமைச்சிலிருந்து தேவையான நிதியும் கிடைத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் இதற்கான நியமனங்கள் வழங்கப்படுவதுடன் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. (6-2)

## கொழும்பு மாநகர சபையை கூட்டுத்தாபனமாக மாற்ற திட்டம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையைக் கூட்டுத்தாபனமாக மாற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா தெரிவிக்கையில்,

கொழும்பு மாநகரசபையை கொழும்புக் கூட்டுத்தாபனமாக மாற்றுவது தொடர்பாக கடந்த ஒருவருடத்திற்கு முன்னரே இதுபற்றி கலந்துரையாடல்களை மேற் கொண்டிருந்ததாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஆளும் கட்சியினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையில் இடம் பெற்று வரும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான கலந்துரையாடல்கள் நிறைவடையும் வரை கொழும்பு மாநகர சபையின் மாற்றங்கள் குறித்த விடயங்கள் தாமதம் அடையும் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சி தலைவருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலேயே ஆராயப்பட்டுள்ளதெனவும் எவ்வாறாயினும் கொழும்பு மாநகர சபையைக் கூட்டுத்தாபனமாக மாற்றுவது தொடர்பில் நாடாளுமன்ற அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என ஆளுநர் வலியுறுத்தியுள்ளார். (6)

## டெங்கை குணப்படுத்தும் பப்பாசி ஜூஸ்; மருத்துவ ஆராய்ச்சியில் நிரூபணம்



டெங்குக் காய்ச்சலை முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய நிவாரணியாக பப்பாசி மரத்தின் இலைகள் உள்ளன என்று இலங்கையின் பாரம்பரிய வைத்திய நிபுணர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

பப்பாசி இலைகளில் ஜூஸ் தயாரித்துக் குடித்தால் டெங்கு நோய் முற்றாகக் குணமாகி விடும் என்று வைத்தியகலாநிதி சரத் ஹெட்டிகே ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளார்.

இலங்கையில் மிகவும்வேகமாக டெங்குக் காய்ச்சல் பரவி வருகின்றதுடன் அது ஏராளமான உயிர்களைக் குடித்துக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையிலேயே வைத்திய கலாநிதி ஹெட்டிகே டெங்கு நோயாளர்கள் சுமார் 70 பேருக்கு பப்பாசி இலைகளில் 10 மில்லி லீற்றர் ஜூஸ் தயாரித்துக் கொடுத்தார்.

பரிசோதனைக்குட்படுத்தப்பட்டவர்களில்10 முதல் 15 பேர் வரையானோர் சிறுவர்கள் ஆவர். இவர்களில் அனைவருக்குமே டெங்கு பரிபூரணமாகக் குணமாகிவிட்டது.

பாரம்பரிய மருத்துவ முறை மூலம் டெங்கை முழுமையாக குணப்படுத்த முடியும் என்பது முதல் தடவையாக உலகில் நிரூபிக்கப்பட்டுள்ளது என வைத்திய கலாநிதி ஹெட்டிகே மகிழ்ச்சி தெரிவித்தார். (6-2)

# பல்கலைக்கழகங்களில் பகிடிவதையில் ஈடுபடுவோர் வெளியேற்றப்படுவர்

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பல் கலைக் கழகங்களில் பகிடிவதை களை மேற்கொள்ளும் நடவடிக்கை களுக்கு உடனடியாக தடை கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பகிடிவதை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற் றம் காணப்படுகிறவர்கள் பல் கலைக் கழகங்களில் இருந்து வெளியேற் றப்படுவர் என உயர் கல்வி அமைச் சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

பல்கலைக்கழக பகிடிவதைக்கு எதிரான சட்டத்தின் கீழ் குற்றம் காணப்படுபவர்களுக்கு எட்டு மாத சிறைத்தண்டனை வழங்கப்பட வகை செய்யப்பட்டுள்ளதுடன்

இம் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்க ளில் ஈடுபட அனுமதிக்கப்படுவார் கள். ஆனால் வகுப்புகளை பகிஷ்கரிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என் றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் வரவு 80 வீதத் திற்கும் குறைவாக இருந்தால் அவர் கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக் கப்படமாட்டார்கள் என்றும் அமைச் சர் எச்சரித்துள்ளர். (6)

# பான் கீ மூன் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வருகின்றார்

## அமைச்சர் விமல்வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தனது அதி காரத்தை துஸ்பிரயோகம் செய்து வருவதாக வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் இலங்கைத் தலைமையகத்திற்கு எதிரில் உண் ணாவிரதப் போராட்டத்தை நடத்திய தன் பின்னர் முதல் தடவையாக விமல் வீரவன்ச ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

பான் கீ மூனின் நிபுணர்கள் குழு தொடர்பில் அரசாங்கம் வெளி விகார அமைச்சின் ஊடாக இராஜ தந்திர நடவடிக்கைகளை மேற்கொள் ளும் என அவர் குறிப்பிட்டுள்ளது டன்; மக்களின் பலத்தை வெளிப் படுத்தும் நோக்கில் தாம் இந்த உண் ணாவிரதப் போராட்டத்தை நடத்தியதாக தெரிவித்துள்ளதுடன் பான் கீ மூனின் நடவடிக்கைக ளுக்கு எதிராக நாட்டின் சகல முற் போக்கு சக்திகளையும் கட்சிகளை யும் ஒன்று திரட்டி தமது போராட் டத்தை முன்னெடுக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமது உண்ணாவிரதப் போராட் டம் பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவிற்கு கடுமையான அழுத் தத்தை வழங்கியுள்ளதாகவும் நிபு ணர்கள் குழுவின் எதிர்கால நட வடிக்கைகளின் அடிப்படையில் தமது எதிர்ப்பு போராட்டங்கள் ஒழுங் கமைப்படும் என அவர் குறிப்பிட் டுள்ளார். (6)

## நீங்காத நினைவில்
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 . 02 . 1948

உதிர்வு 19 . 07 . 2009



### அமரர் பாவுலுப்பிள்ளை அரியதாஸ்

எம் அன்புத் தெய்வமே
எம் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
ஒளியூட்டிய தெய்வமே
ஆண்டொன்று சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்

இன்று (19.07.2010) திங்கட்கிழமை அன்னாரது திணைவாக காலை 10 மணிக்கு பொலிகண்டி குழந்தை யேசு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய உபசரணையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட நேரடி அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்

குடியேற்றம்
ஊறணி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்


# 12 மாத காலத்தில் சரளமாக ENGLISH பேச விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**PR EDUCATIONAL TOOLS PTY LTD - AUSTRALIA** என்னும் நிறுவனம் **AUSTRALIA** வில் பதிவு செய்யப்பட்டது. இந்த நிறுவனம் **ENGLISH, SCIENCE, CHEMISTRY, MATHS & PHYSICS** பாடங்களை ஆசிரியர்களின் உதவியின்றி கற்கக் கூடிய முறையில் புதிய வழிமுறைகளை உபயோகித்து **DVD** மூலம் பல்வேறு நாடுகளில் விற்பனைசெய்து வருகின்றது.

**ENGLISH DVD** வெளியீடுகள் யாவும் 13 வருடங்களாக **AUSTRALIA** வில் வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணம் மற்றும் **AUSTRALIA** பல் கலைக் கழகங்களில் பட்டப்படிப்புக்களை மேற்கொண்டு **AUSTRALIA** வில் **SCIENCE & CHEMISTRY** ஆசிரி யராக கடமையாற்றும் ஆங்கில மொழியை சரளமாகவும் அழகாகவும் பேசும் **MR.POOBALU VAR ATHAN (B.Biotech Bsc B.Teaching Msc)** என்பவரினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

1. இவ்வெளியீடுகள் அன்றாட நடைமுறை காட்சிகளுடன் ஒரு தொடராக வெளிவருகின்றது. இவற்றை பெற்றுக் கொள்பவர்களுக்கு வருடம் தோறும் இலவசமாக ஆங்கில **Audio Cd** க்கள் வழங்கப்படும்.
2. எமது வெளியீடுகள் ஆங்கிலத்தையும் தமிழையும் தொடர்புபடுத்தி அதன் வேறுபாடுகள், ஒற்றுமைகள் என்பனவற்றை கருத்தில் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது.
3. மிக இலகுவான முறையில் உண்மையான காட்சிகளின் மூலம் இவ் **DVD** க்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
4. எமது வெளியீடுகள் முழுவதும் நடைமுறை வாழ்க்கைகளில் தமிழர்களும் ஆங்கிலேயர்களும் உரை யாடுகின்ற முழு விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. ஒவ்வொரு **DVD** உடனும் **DVD** யில் சொல்லப்படுகின்ற வசனங்களை கொண்ட ஒரு சிறு புத்தகமும் தரப் படும்.
6. இந்த **DVD** க்கள் தமிழர்கள் சிறந்த முறையில் ஆங்கிலம் பேச வேண்டும் என்ற எண்ணக் கருவை மை யமாக வைத்து உருவாக்கப்பட்டது.

## எமது வெளியீடுகளை கற்பதன் மூலம்

1. சிறந்த முறையில் ஆங்கில இலக்கணத்தை கற்றுக்கொள்வீர்கள்.
2. சிறந்த முறையில் வசனங்களை அமைத்து அழகாக ஆங்கிலம் பேசுவீர்கள்.
3. சிறந்த முறையில் சொற்களை உச்சரிப்பீர்கள்.
4. 12 மாத காலத்தில் சரளமாகவும் அழகாகவும் எந்த ஒரு சிக்கலும் இன்றி வாழ்க்கையின் எந்தப்பகுதியிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் சரளமாகவும் அழகாகவும் ஆங்கிலத்தைப் பேசுவீர்கள்.

**எங்கள் DVD & CD மட்டுமே நீங்கள் சிறந்த முறையில் ஆங்கிலத்தை பேசுவதற்கும் எழுதுவதற்கும் உதவும்.**

**Note**: உள்நாட்டிலோ அல்லது ஆங்கில மொழியை தாய் மொழியாக கொண்டிராத நாடுகளில் (உதார ணமாக இந்தியா) உருவாக்கப்பட்ட ஆங்கில **DVD** க்கள் அல்லது **CD** க்கள் நீங்கள் சிறந்த முறையில் ஆங் கிலத்தை பேசுவதற்கும் எழுதுவதற்கும் உதவமாட்டாது. ஏனெனில் இவற்றை தயாரிப்பவர்களின் **Spoken English** அறிவு மிகவும் குறைவானது. அத்துடன் இவர்களின் ஆங்கில உச்சரிப்பும் சிறந்ததல்ல.

***Note:*** **எமது DVD க்கள் CD க்களை COPY செய்வது குற்றமானது. இந்த குற்றச் செயல் செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

எமது முதலாவது **DVD** யை கற்றுக்கொள்வதன் மூலம் சிறந்த முறையில் ஆங்கிலம் பேசுவது, எழுதுவது போன்றவைகளில் மிகச்சிறந்த முன்னேற்றத்தை அடைவீர்கள் என்பதற்கு நாம் உத்தரவாதம் தருகின்றோம் எமது (Sample DVD யை பார்க்க விரும்பின் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.)

**கலாசேத்திரா நுண்கலை வளாகம் (Kalashethra Educational Fine Arts Campus),**
**அம்மன் கோவிலடி ,மின்சார நிலைய வீதி,**
**ஊரெழு மேற்கு, ஊரெழு.**

***தொடர்பு கொள்ளவேண்டிய தொலை பேசி எண்: 0217901991.***
**Emali: Chemistry 85@ rocketmail. compr.edu.tools.english.hb@gmail.com**

சிறந்த முறையில் ஆங்கில மொழி யை பேசவோ அல்லது எழுதவோ விரும்புபவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் அல்லது **Phone** இல் அல்லது **Email** இல் தொடர்பு கொள்ளவும்.

எமது **DVD & CD** க்கள் வயது வேறுபாடின்றி, தொழில் வேறுபாடின்றி பாடசாலை மாணவர்கள் **,DOCTORS, Engineers, Accountants, University Students ,UniversityLecturers, Carpenters, School teachers,Public Servants, Technical College Students, Nurses, Shop Assistants** மற்றும் யாவரும் உபயோகிக்கலாம்.

எமது வெளியீட்டைப்பெற விரும்புவோர் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் எதிர்வரும் ஆகஸ்ட் 07 ஆம் திகதிக்குள் முற்பணம் செலுத்தி உங்களின் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.DVD க்கள் ஆகஸ்ட் 20 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படும்.
**விலை DVD+ புத்தகம்(DVD இல் சொல்லப்படும் வசனங்கள்) +Free Audio Cds ரூபா 1100/- மட்டுமே.**

*Note:* Free ஆங்கில **Audio CD** க்கள் தங்களால் பணம் செலுத்தப்பட்ட **DVD** யைப் பெற்றுக் கொண்ட சில வாரங்களில் வழங்கப்படும்.

பெற்றோர்களே, நலன் விரும்பிகளே! நீங்களும் உங்கள் பிள்ளைகளும் சிறந்த முறையில் ஆங்கிலத்தைப் பேச, எழுத விரும்பினால் எமது வெளியீடுகளை வாங்கிக் கொள்ளவும்.ஒரு வருடத்தில் குறிப்பிட்ட கால இடைவெளியில் 3 **DVD** க்கள் வெளிவரும்.

**ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய DVD க்கள் மட்டும் கையிருப்பில் உள்ளதால்DVD க்களைப் பெற்றுக் கொள்ள முந்துங்கள்.**

## PREDUCATIONAL TOOLS PTY LTD- AUSTRALIA English DVDs



(1845)

# பழைமைக்கும் புதுமைக்கும் உறவான எனது கல்விசார் சிந்தனைகள்




தமிழர் தலைநிமிர் கழகமாம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நன்மாணாக்கனாக 13 வருடங்களும் நல்லாசானாக 19 வருடங்களும் செயலாற்றி ஒட்டுமொத்தமாக 32 ஆண்டுகளை இந்து அன்னையோடு களித்த வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் என்றுமே புதுமையான நற்காரியங்களில் ஈடுபடும் தன்மை கொண்டவர். அத்தகு தன்மை காரணமாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு) தனது நூற்றாண்டு விழாவை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் நடத்திய வேளை, முதல் நாள் விழாவில் தனது 80ஆவது பிறந்த நாள் ஞாபகப் பரிசாக "எனது கல்வி சார் சிந்தனைகள்" எனும் மலரை எழுதி சங்கத்தினர் ஊடாக வெளியீடு செய்து வைத்தார்.

## நூல் விமர்சனம்

வி.சிவசுப்பிரமணியம் அவர்கள் தனது நூலில் முதற்கட்டமாக இந்து அன்னையுடன் தொடர்புபட்ட 218 கல்வி யாளர்கள் பற்றிய சிறு குறிப்புக்களை, அவர்களது பெயர்களை ஆங்கில எழுத்துக்களடிப்படையில் வரிசைப்படுத்தி வழங்கியுள்ளார்.

இதன்மூலம் இவர்களிடம் கற்ற மாணவர்களும், சமகாலத்தில் இவர்களுடன் கற்ற நண்பர்களும் இவரது உறவினர்களும் வாசித்து மகிழ்வுறவும் நினைவு கூரவும் வழிவகை செய்துள்ளார்.

இந்நூலின் இரண்டாவது கட்டமாக இடம்பெறும் புகைப்படங்களை நோக்குகையில் சமய -சமூக சேவையிலீடுபாடு போன்றவற்றைப் பிரதிபலிக்கும் படங்களை உள்ளடக்கியுள்ளார். மாணவப் பருவம் முதல் இற்றை நாள் வரை இப்படங்களையெல்லாம் சேகரித்து, திரட்டி வைத்திருப்பதில் வி.சி. அவர்கள் கொண்ட ஆர்வமானது தற்கால மாணவர்களை இவ்வாறு செயலூக்கம் பெறவும், படங்களைச் சேரிக்கவும், ஆவணப்படுத்தவும் தூண்டுவதாக, நெறிப்படுத்துவதாக அமைகின்றது.

மலரின் மூன்றாவது கட்டமானது வி.சி. அவர்கள் சேவை புரிந்த கல்லூரிகளில் அவருடன் இணைந்து சேவையாற்றியவர்கள், நைஜீரியா, சீசெல்ஸ் நாடுகளின் பல்வேறு துறைசார் சேவையாளர்கள், நண்பர்கள், தன்னிடம் கல்வி பயின்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு பதவிகளை அலங்கரிக்கின்ற பழைய மாணவர்கள், வி. சி. அவர்களது பண்புநலம், சேவை அர்ப்பணிப்பு,தலைமைத்துவம் சார் விழுமியங்கள் என்பவற்றை கவிதை வடிவிலும், கட்டுரைவடிவிலும் தமிழ், ஆங்கிலம் சார்ந்த இரு மொழிகளிலும் எழுதி நூலினை சிறப்பித்துள்ளார்கள்.

சிறப்பாக அவருடைய மாணவர்கள் வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் குருவாக நின்று தம்மை வழிப்படுத்திய முறைமையினைச் சுட்டி எழுதிய வரிகளை வாசிக்கும் போதெல்லாம் திருவாதவூரடிகள் புராணத்தில் தடுத்தாட் கொண்ட படலத்தில் இடம்பெறும் வரிகள் நினைவுக்கு வருகின்றன. அந்த அளவிற்கு அவர் மாணவர்கள் மனங்கொள்வதனை நூல் வாயிலாக அறியமுடிவதுடன் குரு - சிஷ்ய முறையின் வரன்முறைச் சிறப்பும் புலனாகின்றது.

பக். 269,பக். 270 களில் இடம்பெறும் தொழிற் சங்கம் சார் விடயங்கள் அக்கால வரலாற்று நிகழ்வுகளை எடுத்துக்காட்டுவனவாக விளங்குவது சிறப்புக்குரியன. அத்துடன் சேவை செய்பவர்களுக்கு வரும் இன்னல்களைக் களைதல், தனிமனித வரலாற்றுக் கடமை என்பதனையும் வீசகர்களுக்கு வலியுறுத்துவதாக அமைகின்றது.

நிறைவாக நூல் ஆசிரியர் நன்றி நவிலலைச் சுருக்கமாகவும், இனிய வகையிலும் வெளிபடுத்திய பாங்கு அவர் தம் உள்ளார்ந்த ஆற்றலை வாசகர்களுக்கு எடுத்துக்காட்டுகின்றது. மேலும் தன் மாணவப்பருவத்தில் இடம்பெற்ற கல்லூரி இலச்சினையை முன் அட்டைப் படத்தில் கவர்ச்சிகரமாக இட்டதுடன் நூலின் பின்புற அட்டையில் நூற்றாண்டு கடந்த புகழுறு மண்டபத்தையும், தற்போது அமைக்கப்பட்ட குமார சாமி மண்டப நுழைவாயிலையும் வர்ண மிகு படங்களாக இட்டமை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

பொ.ஞானதேசிகன்
உபஅதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

நூலில் அடங்கும் விடயங்கள் பழைமையும், தற்காலமும் சார்ந்தவை மட்டுமல்லாது நூலாசிரியர் பழைமைக்கும் புதுமைக்கும் உறவுப் பாலமாகவும் திகழ்கின்றார். இந்த வகையில் மலரின் அட்டைப் படங்கள் சாலவும் பொருத்தப்பாடான வடிவமைப்புகளாக விளங்குகின்றன.

இந்நூலானது வாசிக்கும் இளம் சமூகத்தினர் மனதில் நல்ல சிந்தனைக் கிளறல்களையும், பலன்தரு செயலாற்றுகைக்கான தூண்டல்களையும் உருவாக்கி, அவர்களை சமூகத்தில் நன்கு துலங்க வைக்கும் என உறுதிபடக் கூறலாம். இந்துக் கல்லூரியின் ஆவணக் காப்பகத்திற்கு இம்மலர் ஒரு செம்மலர் ஆகும்.

## ஐ.நா. நிபுணர் குழுவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு இலங்கை அரசு முனைப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் இணக்கபாட்டின் 33, 34 ஆம் உப ஷரத்துக்களை மீறும் வகையில் ஐக்கிய நாடுகள் செயலாளர் பான் கீ மூன் நியமித்துள்ள நிபுணர்கள் குழுவிற்கு எதிராக நெதர்லாந்தின் ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் முனைப்புக்களை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக சர்வதேச சட்ட நிபுணர்களிடம் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இலங்கை ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்பதால், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அனுமதியின்றி வெளிநபர்களைக் கொண்ட குழுவை நியமிக்கும் அதிகாரம் பான்கீமூனுக்கு இல்லை என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் சர்வதேச நீதிமன்றத்தில் முன்வைக்க உள்ளது.

சர்வதேச அமைப்புக்களின் சட்டங்களை மீறிச் செயற்பட முடியாது சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதி ரொசலின் ஹிகின்ஸ் தீர்ப்பொன்றை வழங்கியுள்ளதுடன் இதனடிப்படையில் ஐக்கிய நாடுகள் செயலாளர், அந்த அமைப்பின் சட்டத்திற்குப் புறம்பாக செயற்படமுடியாது என அரசாங்கத்தின் உயர்மட்டத் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் தனது அதிகாரத்தை மீறி செயற்பட்டமை தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலாளருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் முதல் நாடுஇலங்கையாகும்.அதேவேளை ஐக்கிய நாடுகள் செயலாளர் பான்கீமூனின் பதவிக்காலம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முடிவடையவுள்ளது.

அவர் மீண்டும் அந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதை தடுப்பதற்காக இலங்கை அரசாங்கம், அணிசேரா நாடுகளுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளது. (6)

## ஜே.வி.பி.தலைவர் சீனாவுக்கு விஜயம்

(கொழும்பு)

ஜேவிபியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சீனாவிற்கு விஜயம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.சீ.ஏ.பி.மாநாட்டில் கலந்துகொள்ளும் நோக்கில் அவர் சீனாவிற்கு விஜயம்செய்துள்ளதுடன், சீன அரசாங்கத்தின் முக்கிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் நடைபெறவுள்ள ஐ.சீ.ஏ.பி மாநாட்டில் ஆசியாவின் முன்னணி அரசியல் கட்சிகள் பங்குபற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## இலங்கைக் கடற்பரப்பில்—வலுவான பாதுகாப்பு நடவடிக்கை

இலங்கைக் கடற்பரப்பின் பாதுகாப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

200 கடல் மைல் வரையிலான பரப்பிலும், சர்வதேச கடல் எல்லையிலும் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுவதோடு,

இதற்கென விசேட யுத்தக் கப்பல்கள் பயன்படுத்தப்பட உள்ளதாகவும் யுத்தக் கப்பல்களின் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதன்மூலம் பிறநாட்டவர்கள் இலங்கையின் கடல் வளங்களை சூறையாடுவதனைத் தடுக்கமுடியும் எனக் கடற்படையினர் நம்பிக்கை வெளியிட்டதுடன், மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்காமல் இருப்பதனை உறுதிசெய்யும் நோக்கில், பல்வேறு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

## கட்சி தாவும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பதவியிழக்க நேரிடும்

### சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கட்சி தாவினால் பதவியை இழக்கநேரிடலாம் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது கட்சி தாவல்களில் ஈடுபடுவோரின் பதவியை இரத்துச்செய்ய அரசாங்கமும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் தெரிவித்துள்ளன.

வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது சில புதிய நடைமுறைகளை அமுல்படுத்த அரசாங்கமும், ஐக்கிய தேசியக் கட்சியும் தீர்மானித்துள்ளதுடன் இந்த இணக்கப்பாடுகளின் அடிப்படையில் உள்ளூரட்சி மன்ற நடவடிக்கைகளை நேர்த்தியாக முன்னெடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் அரசாங்கத்திற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும்இடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# கனடாவில் இயங்கிவந்த தமிழ்த்தொண்டு நிறுவனத்தின் பதிவுகள் இரத்து

(கொழும்பு)

கனடாவில் இயங்கி வந்த ஒட்டாவா தமிழ் அகதிகளுக்கான சமூக நிறுவனத்தின் பதிவு களை கனேடிய வருமான வரித்துறையினர் இரத்து செய்துள்ளனர்.

கனேடிய ஊடகங்கள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன.

கனேடிய வரிவருமான சட்டத்தின் 168 - 1ஆம் இலக்க சரத்தின் கீழ் நேற்றுமுன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் கவனத்திற்கு கொண்டுவரப்பட் டுள்ளது.

நிதிகளை கையாளுதல் மற்றும் நிர் வகித்தல் தொடர்பில் குறித்த நிறுவனம் முறை யாக செயற்படவில்லை என தெரிவிக்கப் பட்டு அதன் பதிவு இரத்து செய்யப்பட்டுள்ளது டன்; இந்த அமைப்பினால் சுமார் 7 இலட் சத்து 13 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெயர் குறிப்பிடாத அமைப்பு ஒன்றுக்கு நிதியாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதி தமிழீழ விடுதலைப்புலிகள் அல்லது அதற்கு சார்பான அமைப்பு ஒன் றுக்கு வழங்கப்பட்டிருக்கலாம் என கனேடிய வரிவருமானத் திணைக்களம் சந்தேகம் வெளியிட்டுள்ளது. (6)

# சட்டவிரோதமான முறையில் ஈராக்கிற்கு செல்லும் இலங்கைப் பணியாளர்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புப் பெற் றுச் செல்லும் இலங்கையர்கள் சட்டவி ரோத மான முறையில் ஈராக்கிற்கு செல்வதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

அதிகளவு சம்பளத்தைப் பெற்றுக் கொள் ளும் நோக்கில் இலங்கையர்கள் இவ்வாறு சட்டவிரோதமாக ஈராக்கிற்கு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் பணியாற்றுவதற்கு இலங்கை யர்களுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்பட வில்லை என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளதுடன் ஈராக்கில் இலங் கைத் தூதரகம் கிடையாது எனவும் இதனால் தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்வோர் தொடர் பிலான தகவல்களை திரட்ட முடியாது என வும் அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் பல்வேறு வழிகளில் இலங்கையர்கள் ஐயாயிரம் பேர் ஈராக்கில் கடமையாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை ஈராக்கிய விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த இலங்கைப் பொறியியலாளரின் சடலத்தை இலங் கைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப் புப் பணியகம் அறிவித்துள்ளது. (6)

# பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை குறித்த விசாரணைகள் இடைநிறுத்தம்?

(கொழும்பு)

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொட காணாமல் போன சம்பவம் தொடர்பி லான விசாரணைகள் இடை நிறுத்தப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந் தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரதான சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் எக்னெலி கொடவின் தொலைபேசி அழைப் புக்கள் சோதனையிடப்பட்டதன் மூலம் பல் வேறு தகவல்கள் கிடைக்கப்பெற்றதாக பொலி ஸார் அறிவித்துள்ளனர்.

இந்த தகவல்களின் அடிப்படையில் பொலனறுவை மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களை பொலி ஸார் கைது செய்திருந்தனர்.

எவ்வாறெனினும் விசாரணைகளை தொடர்வதற்கான அறிவுறுத்தல்கள் கிடைக் கப்பெறவில்லை என அதிகாரிகள் தெரிவித் துள்ளதுடன் விசாரணை தொடர் பான சகல விடயங்களும் மேலதிகாரிகளிடம் ஒப்படைக் கப்பட்டுள்ள போதிலும் விசாரணை நட வடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை பிரகீத் எக்னெலிகொடவை ஓர் ஊடகவியலாளராக கருத முடியாது எனவும் இலங்கைப் பிரஜை என்ற ரீதியில் எக்னெலி கொட காணாமல் போன விடயம் குறித்து விசாரணை நடத்தப்படும் எனவும் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண் மையில் தெரிவித்துள்ளார். (6)

# ஐ.நா. அமைதி காக்கும் படைப்பிரிவில் இலங்கைப் பொலிஸாருக்கு சந்தர்ப்பம் வழங்குவதில் காலதாமதம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படைப்பிரிவில் இலங்கை பொலிஸாருக்கு சந்தர்ப்பம் வழங்குவதில் காலதாமதம் ஏற் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையணிக்கு 100 இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள் வதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் எவ்விதமான காரணங்களும் தெரிவிக்கப்படாத நிலையில் பொலிஸாரை உள்ளீர்க்கும் நடவடிக்கை ஒத்திவைக்கப்பட் டுள்ளது.

அமைதிகாக்கும் படைப்பிரிவில் இணைத் துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்காக கடந்த யூன் மாதம் 18ஆம் திகதி இரண்டு ஐ.நா. அதிகாரி கள் இலங்கைக்கு விஜயம் செய்ய இருந்த தாகவும் எனினும் இதுவரையில் குறித்த அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய வில்லை என குறிப்பிடப்படுகிறது.

450 பொலிஸ் உத்தியோகத்தர்களை அமைதி காக்கும் படையில் இணைத்துக் கொள்வதற்கான பரீட்சைகள் நடத்தப்பட்டதா கவும் இதில் 100 பேர் மட்டுமே தகுதிபெற்றுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வழமையான ஐக்கிய நாடுகள் அமைப் புகள் அதிகாரிகள் குறிப்பிட்ட நேரத்தில் ஆட் சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதா கவும் ,இந்த காலதாமதம் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும் உயர் பொலிஸ் அதி காரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# 19.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்

- 1545 - இங்கிலாந்தின் *மேரி றோஸ்* என்ற போர்க்கப்பல் போர்ட்ஸ் மவுத் என்ற இடத்தில் மூழ்கியதில் 35 பேர் மட்டும் தப்பினர்.
- 1553 - 9 நாட்களே இங்கிலாந்தின் அரசியாக இருந்த ஜேன்கிறே பதவியிழந்தாள். முதலாம் மேரி அரசியாக முடி சூடினாள்.
- 1870 - பிரான்ஸ் புரூசியா மீது போரை ஆரம்பித்தது.
- 1900 - பாரிசில் முதலாவது சுரங்கத் தொடரூந்து சேவை ஆரம்ப மாயிற்று.
- 1912 - அரிசோனா மாநிலத்தில் 190 கிலோகிராம் எடையுள்ள விண்கல் ஒன்று விழ்ந்து கிட்டதட்ட 16ஆயிரம் துகள்களாகச் சிதறுண் டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலியப் போர்க்கப்பல் ஒன்று மூழ்கியதில் 121 பேர் கொல்லப்பட்டனர்.
- 1947 - பர்மிய தேசியவாதியான ஒங் சான் மற்றும் அவரது 6 அமைச் சர்கள் கொல்லப்பட்டனர்.
- 1967 - வடகரோலினாவில் போயிங் 727 மற்றும் செஸ்னா 310 விமானங்கள் நடுவானில் மோதியதில் 82 பேர் கொல்லப்பட்டனர்.
- 1979 - நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு சமோசா அரசு சண்டி னீஸ்டா கிளர்ச்சிவாதிகளால் கவிழ்க்கப்பட்டது.
- 1980 - ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மொஸ்கோவில் ஆரம்பமாயின.
- 1985 - இத்தாலியில் அணைக்கட்டு ஒன்று இடிந்ததில் 268 பேர் கொல்லப் பட்டனர்.
- 1996 - ஒலிம்பிக் விளையாட்டுக்கள் அட்லாண்டாவில் ஆரம்பமாயின.
- 1996 - ஓயாத அலைகள் ஒன்று: முல்லைத்தீவில் இலங்கைக் கடற்படை யின் ரணவிரு பீரங்கிப் படகு விடுதலைப் புலிகளால் மூழ்கடிக் கப்பட்டது. ஏழு கடற் கரும்புலிகள் சாவடைந்தனர்.

## பிறப்புகள்

- 1827 - மங்கள் பாண்டே, சிப்பாய்க் கிளர்ச்சியை ஆரம்பித்த பிரித்தா னியக் கிழக்கிந்தியக் கம்பனியின் சிப்பாய் (இ.1857)
- 1893 - விளாடிமீர் மயகோவ்ஸ்கி, ரஷ்யக் கவிஞர் (இ.1930)
- 1938 - ஜெயந்த்விஷ்ணு நர்லிகர்,இந்திய அறிவியலாளர்
- 1979- தில்கரபெர்னான்டோ, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சிறப்பு வேகப் பந்து வீச்சாளர்
- 1979 - மாளவிகா தமிழ்த் திரைப்பட நடிகை

## இறப்புகள்

- 1947 - ஒங் சான், பர்மிய தேசியவாதி(பி.1915)
- 1987 - ஆதவன், தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர் (பி.1942)



1947 - தமிழிசை ஆய்வாளர் சுவாமி விபுலானந்தர் இறந்தார் (பி.1892)

# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

**தரம்-13** | **முன்னோடிப் பரீட்சை** | **ஆனி 2010**

### பௌதிகவியல் I நேரம் : 2 மணி

29. PQ என்னும் 1.0m நீளமான கடத்தும் உலோகக் கோல் ஒன்று தாளிற்கு செங்குத்தாக உள்நோக்கி 4.0T காந்தப்பாய அடர்த்திக்கு செங்குத்தாக படத்தில் காட்டியவாறு $V=2.0ms^{-1}$ என்னும் உறுதிக் கதியுடன் அசைக்கப்படுகின்றது. 10μF கொள்ளளவத்தை உடையகொள்ளளவி ஒன்றுபடத்தில் காட்டியவாறு இணைக்கப்பட்டுள்ளது. எனின்,




1. தட்டு A யில் +80μC ஏற்றமும் தட்டு B யில் -80μC ஏற்றமும் இருக்கும்.
2. தட்டு A யில் -80μC ஏற்றமும் தட்டு A யில் +80μC ஏற்றமும் இருக்கும்.
3. தட்டுகள் A,B யில் ஏற்றம் பூச்சியமாகும்.
4. தட்டுகளில் உள்ள ஏற்றம் நேரத்துடன் அதிகரிக்கும்.
5. தட்டுகளில் உள்ள ஏற்றம் அசைக்கப்படும் கதியில் தங்கியிருக்காது.

30. ஓர் r ஆரையுடைய வட்ட வடிவ இரசத்துளி படத்தில் காட்டியவாறு கிடையான மேசை மீது உள்ளது. இரசத்தின் அடர்த்தி ρ ஆகவும் அதன் மேற்பரப்பிழுவை T ஆகவும் இரசத்திற்கும்,




மேசைக்குமிடையிலானதொடுகைக் கோணம் (180-α)ஆகவும் இருப்பதை வரிப்படம் காட்டுகின்றது. எனின். இரசத்தின் நிறை (பிறையுருவின் நிறையைப் புறக்கணிக்க)

1) $\pi r^2 h\rho g$   2) $\pi r^2 h\rho g-2\pi rT\sin\alpha$   3) $\pi r^2 h\rho g-2\pi rT\cos\alpha$

4) $\pi r^2 h\rho g+2\pi rT\sin\alpha$   5) $\pi r^2 h\rho g+2\pi rT\cos\alpha$

31. முகவை ஒன்றில் உள்ள நீரினுள் மயிர்த்துளைக் குழாய் அமிழ்த்தப்பட்டு இத்தொகுதி சுயாதீனமாக விழும் உயர்த்தியினுள் வைக்கப்படுகின்றது.
1. நீரானது மயிர்த்துளைக் குழாயினுள் மேல் எழாது.
2. நீரானது மயிர்த்துளைக் குழாயினுள் நிரம்பியிருக்கும்.
3. சாதாரணமான நிலைமையில் எழும் உயரத்திற்கு நீர் மயிர்த் துளைக்குழாயில் எழுந்திருக்கும்.
4. சாதாரணமான நிலைமையின் கீழ் எழும் உயரத்திலும் குறைவான உயரத்திற்கு எழுந்திருக்கும்.
5. சாதாரணமான நிலைமையின் கீழ் எழும் உயரத்திலும் கூடிய உயரத்திற்கு எழுந்திருக்கும்.

32. $E_1,E_2$ மின்னியக்க விசைகளை உடைய இரு கலங்கள் $(E_1>E_2)$ அவற்றின் அகத்தடைகள் முறையே $r_1,r_2$ ஆகவும் இருப்பின் படத்தில் காட்டிய வாறு இணைந்திருக்கும் போது AB யிற்கு குறுக்கேயான அழுத்த வேறுபாடு,




1) $\frac{E_1+E_2}{2}$   2) $\frac{E_1r_1+E_2r_2}{r_1+r_2}$   3) $\frac{E_1-E_2}{2}$

4) $\frac{E_1r_2-E_2r_1}{r_1+r_2}$   5) $\frac{E_1r_2+E_2r_1}{r_1+r_2}$

33. சர்வசமனான n தடைகளை சமாந்தரமாக இணைக்கும்போது விளையுள் தடை $R_0$ ஆகும். இத் தடைகளை தொடராக தொடுக்கும் போது சமவலுத்தடை,

1) $\frac{R_0}{n^2}$   2) $n^2R_0$   3) $\frac{R_0}{n^3}$   4) $n^3R_0$   5) $nR_0$

34. ஓர் ஒளி மின் கலமொன்றில் படும் ஒரு நிற ஒளியின் மீடிறன் $f_1$ ஆகவும், நிறுத்தும் அழுத்தம் $V_1$ ஆகவும் இருக்கக் காணப்பட்டது. இவ் ஒளி மின்கலத்தில் $f_2$ அதிர்வெண் உடைய ஓர் ஒரு நிறஒளி படும்பொது உருவாகும் புதிய நிறுத்தும் அழுத்தம்,

1) $v_1+\frac{h}{e}(f_2-f_1)$   2) $v_1-\frac{h}{e}(f_2-f_1)$   3) $v_1+\frac{h}{e}(f_2+f_1)$

4) $v_1-\frac{h}{e}(f_2+f_1)$   5) $v_1$

35. 2ρ அடர்த்தியுடைய திரவத்தினுள் அடிப்பகுதியில் இருந்து ρ அடர்த்தியுடைய கோளமானது விடுவிக்கப்படுகின்றது. அது மேல் நோக்கி இயங்கும் போது,
1. அதன் ஆர்முடுகல் அதிகரிக்கும்.
2. அதன் ஆர்முடுகல் குறைவடையும்.
3. மாறா ஆர்முடுகலுடன் இயங்கும்.
4. பூச்சிய ஆர்முடுகலுடன் இயங்கும்.
5. அது ஓய்வில் இருக்கும்.

36. மையத் தொடுகை வகை முழு அலைச் சீராக்கி ஒன்றை அருகே உள்ள உருகாட்டுகின்றது. காட்டப்பட்ட பெய்ப்புக்கு ஒத்த $D_1$ என்னும் இருவாயி பங்களிப்பினால் வரும் பயப்பு,







37. அம்பியர் மானி ஒன்றின் தடை 0.16Ω ஆகும். 0.04Ω தடையினால் பக்கவழிப்படுத்தும் போது அம்பியர்மானி 8A மின்னோட்டத்தை வாசிக்கின்றது. எனின் பிரதான சுற்றிலுள்ள மின்னோட்டம்,

1. 40A   2. 32A   3. 24A   4. 20A   5. 8A

38. மூன்று முடிவில் நீளக் கம்பிகள் P,Q,R ஆனது சம மின்னோட்டங்களை P யும் R உம் தாளுக்கு செங்குத்தாக உள்நோக்கியும் Q தாளிற்கு செங்குத்தாக வெளிநோக்கியும் காவுகின்றது. P யில் தாக்கும் விளையுள் விசையின் திசையை திறம்படக் காட்டுவது,







39. மின்னோட்டம் I அடைக்கப்பட்ட தடம் ஒன்றைச் சுற்றி உருவில் காணப்படுகின்றவாறு பாய்கின்றது. மையம் O வில் உண்டாக்கப்படும் காந்தப்பாய அடர்த்தியை தருவது,




1) $\frac{\mu_o I\theta}{4\pi}\left(\frac{1}{a}+\frac{1}{b}\right)$   2) $\frac{\mu_o I\theta}{4\pi}\left(\frac{1}{a}-\frac{1}{b}\right)$   3) $\frac{\mu_o I\theta}{2\pi}\left(\frac{1}{a}+\frac{1}{b}\right)$

4) $\frac{\mu_o I\theta}{2\pi}\left(\frac{1}{a}-\frac{1}{b}\right)$   5) $\frac{\mu_o I\theta}{8\pi}\left(\frac{1}{a}-\frac{1}{b}\right)$

40. சமாந்தரத் தட்டுத் தாள்கள் a,b என்பன என்னும் $\sigma_1,\sigma_2$ ஏற்ற அடர்த்திகளுடன் சீராக பரம்பியுள்ளது. தட்டுக்களுக்கு இடைப்பட்ட பகுதியில் மின்புலச் செறிவு, $(\sigma_1>\sigma_2)$




1) $\frac{-(\sigma_1+\sigma_2)}{2\varepsilon_0}$   2) $\frac{(\sigma_1-\sigma_2)}{2\varepsilon_0}$   3) $\frac{(\sigma_1+\sigma_2)}{2\varepsilon_0}$

4) $\frac{(\sigma_1+\sigma_2)}{\varepsilon_0}$   5) $\frac{\sigma_1-\sigma_2}{\varepsilon_0}$

41. நன்றாக காவற்கட்டிடப்பட்ட சம குறுக்கு வெட்டுப் பரப்பளவுகள் A யையுடைய X,Y என் னும் இரு உலோகவளைகள் முனைக்குமுனை தொடுக்கப்பட்டு உருவில் காட்டியவாறு வைக்கப்பட்டுள்ளன. உறுதிநிலையில் X இன் வெளிக்காடடப்பட்ட மேற்பரப்பு வெப்பநிலை $\theta_1{}^0C$ யில் வைக்கப்பட்டி ருக்கையில் Y யின் வெளிக்காட்டப்பட்ட மேற்பரப்பு வெப்பநிலை $\theta_2{}^0C$ இலும் வைக்கப்பட்டுள்ளது. X இன் நீளமும் வெப்பக்கடத்தாறும் முறையே l,k உம் Y யின் நீளமும் வெப்பக்கடத்தாறும் முறையே 4l,2k உம் ஆகும் உறுதி நிலையில் வளைகளினூடு வெப்பக்கடத்தல் வீதம், (இங்கு $\theta_1>\theta_2$)




1) $\frac{kA(\theta_1-\theta_2)}{\ell}$   2) $\frac{kA(\theta_1-\theta_2)}{3\ell}$   3) $\frac{kA(\theta_1-\theta_2)}{2\ell}$   4) $\frac{3kA(\theta_1-\theta_2)}{2\ell}$   5) $\frac{2kA(\theta_1-\theta_2)}{3\ell}$

42. ஒரு திண்மக் கோளமும், பொட்கோளமும் ஒரே பதார்த்தத்தால் ஆக்கப்பட்டும் ஒரே பருமனைக்கொண்டும் ஒரே வெப்பநிலைக்கு சூடாக்கப்பட்டு ஒரே சூழலில் குளிர விடப்படுகின்றன. ஒவ்வொரு கோளத்திற்கும், சூழலுக்குமிடையிலான வெப்பநிலை வித்தியாசம் ஆயின் ,
1. $\Delta\theta$வின் எப்பெறுமதிக்கும் பொட்கோளம் விரைவான வீதத்தில் குளிரும்
2. $\Delta\theta$வின் எப்பெறுமதிக்கும் திண்மக்கோளம் விரைவான வீதத்தில் குளிரும்
3. $\Delta\theta$ வின் எப்பெறுமதிக்கும் இரு கோளங்களும் ஒரே வீதத்தில் குளிரும்
4. $\Delta\theta$ வின் சிறிய பெறுமதிகளுக்கு மாத்திரம் இருகோளங்களுக்கும் ஒரே வீதத்தில் குளிரும்
5. குளிரல் வீதம் $\Delta\theta$ வில் தங்கியிருக்காது.

43. 40cm நீள சுரமானிக் கம்பி ஒன்று ஓர் இசைக்கவருடன் 5 அடிப்புகளை உருவாக்குகின்றது. கம்பியின் நீளம் 1cm ஆல் குறைக்கப்படும் போதும் அடிப்புக்களின் எண்ணிக்கை மாறவில்லை ஆயின் இசைக்கவையின் மீடிறன்
1. 200Hz 2. 85Hz 3. 395Hz 4. 400Hz

44.




தரப்பட்ட மின்சுற்றில் காணப்படும் பற்றரியானது புறக்கணிக்கத்தக்க அகத்தடையை உடையது. ஆளியை மூடும் போது சுற்றைச் சுற்றி அழுத்தம் மாறும் வித்தத்தை மிகச் சிறந்த முறையில் வகைக்குறிப்பது,(இணைக்கும் கம்பிகளின் தடை புறக்கணிக்கத்தக்கது. எனவும் BC,CD வழியேயான அழுத்தம் நீளம் வழியே சீராக மாறுகின்றது எனக் கருதுக.)



45. இலட்சியவாயு ஒன்றின் P-V வரிப்படம் அருகே காட்டப்பட்டுள்ளது. வாயுவினால் செய்முறை ABCD யின் போது செய்யப்பட்ட வேலை,
1) $4P_oV_o$
2) $3P_oV_o$
3) $2P_oV_o$
4) $P_oV_o$
5) $-3P_oV_o$




46. இலட்சிய வாயு ஒன்றின் அமுக்கம் (P) எதிர் தனிவெப்பநிலை (T) வரைபுகளை காட்டுகின்றன.




இவ் வரைபுகளில் இருந்து பின்வரும் கூற்றுக்களை கருதுக.
A வரைபு (a) இல் வாயுவின் அடர்த்தி அதிகரிக்கின்றது.
B வரைபு (b) யில் வாயுவின் அடர்த்தி குறைகின்றது.
C வரைபு (c) யில் அடர்த்தி மாறாதிருக்கின்றது.

இக்கூற்றுக்களில்,
1. Aமாத்திரம் உண்மையானது
2. Bமாத்திரம் உண்மையானது
3. Cமாத்திரம் உண்மையானது
4. A,Bமாத்திரம் உண்மையானவை
5. A,B,Cஎல்லாம் உண்மையானவை.

47. குவவு வில்லையினால் உருவாக்கப்படும் மாய விம்பத்தின் உருபபெருக்கம (m),விம்பத்தூரம் (V) உடன் மாறுபடுவதைக் காட்டும் வரைபு,



48. இயல்பான செப்பம் செய்கையில் நிலையிலுள்ள வானியல் தொலைக்காட்டி ஒன்றின் உருப்பெருக்கவலு 10உம் தொலைக்காட்டியின் நீளம் 1.1m உம் ஆகும் தெளிவுப் பார்வையின் இழிவுத் தூரமாகிய 25cm இல் இறுதிவிம்பம் உருவாக்கப்படும் போது உருப்பெருக்க வலு,
1. 3.5 2. 4 3. 14 4. 16 5. 18

49. நீரினுள் உருவாக்கப்பட்ட வளி அரசியம் ஒன்றின் மீது உருவில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு நிற வெளிக்கதிரின் பாதை பின்வருவனவற்றில் யாதாக இருக்கும்.?



50 வீதியோரக் கூம்புக்கள் (Tarffic Cone) படத்தில் காட்டியவாறு அகலமான அடியையும் கூடிய சரிவையும் கொண்டு அமைக்கப்படுகின்றமைக்கான காரணம் காரணங்கள்




A. கூம்புக்கு ஓர் சிறு தள்ளுகை கொடுக்கப்பட்டாலும் கூம்பின் நிறை எதிரான திருப்பதைக் கொடுத்து உறுதிச்சமநிலை அடையும்
B. கூம்பின் நிறை E இற்கு அண்மையில் உள்ளதினால் அழுத்த சக்தி உயர்வாக இருந்து உறுதிச்சம நிலை சாத்தியமாகும்.
C நிறை குறைவாக இருப்பதனால் இலகுவாக தூக்கிச் சென்று அடுக்க இலகுவாக இருக்கும்

இக் கூற்றுக்களில் சரியானது.'.உண்மையானது
1. A மாத்திரம் உண்மையானது
2. B மாத்திரம் உண்மையானது
3. C மாத்திரம் உண்மையானது
4. A,C மாத்திரம் உண்மையானவை
5. A,B,C ஆகிய எல்லாம் உண்மையானவை

51. துணிக்கை ஒன்றின் அழுத்த சக்தி $P$ஆனது $x$ உடன் மாறுபடுவதை காட்டுகின்றது. இதற்கு ஒத்த சாத்தியமான விசை-தூர வளையி,





52. மேற்பரப்பிழுவை $T$ ஐயும் $\rho$ அடர்த்தியையும் உடை நீரினுள் $r$ ஆரையுடைய மயிர்த்துளைக்குழாய் ஒன்று நிலைக்குத்தாக வைக்கப்படுகின்றது. மயிர்த்துளை எழுகை $h$ ஆகவும் தொகைக்கோணம் பூச்சியமாகவும் இருப்பின் அதிகரித்த அழுத்தசக்தி.

1) $\frac{2\pi T^2}{\rho g}$ 2) $\frac{\pi T^2}{\rho g}$ 3) $\frac{2T}{\rho g}$ 4) $\frac{2\pi T^2}{r\rho g}$ 5) $\frac{T^2}{\rho g}$

53. அழுத்தமானியானது 2 $V$ சேமிப்புக் கலத்தையும் 2Ω தடையுடைய lm நீளக்கம்பி ஒன்றைக் கொண்டுள்ளது. கம்பி வழியே lmv $cm^{-1}$ அழுத்தப் படித்திறனை பேணுவதற்கு மாறும் தடை R இன் பெறுமானம்.




1) 40 Ω 2) 38 Ω 3) 20 Ω
4) 42 Ω 5) 19 Ω

# ஆடி மாத இராசி பலன்கள்

## மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)*

**விதைத்த மறுநாளே அறுவடை செய்ய விரும்பும் மிதுனராசி நேயர்களே!**

புரிந்து கொள்ள முடியாதவர்களின் பட்டியலில் இடம்பிடிப்பவர்கள் நீங்கள்தான். உங்கள் மனம் எதை நோக்கிச் செல்கிறது என்பதை யாராலும் கண்டு கொள்ள முடியாது. இன்று ஒரு தகவல், நாளை ஒரு தகவல் என்று மாற்றி மாற்றி சொல்வதில் வல்லவர்கள். கூட்டாளிகளை இடையிலேயே கைவிட்டு வேற்று மனிதர்களுடன் கூட்டுச் சேர்வீர்கள்.

ஆடிமாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் புதன் தனஸ்தானத்தில் சஞ்சரித்து குருவால் பார்க்கப்படுகிறார். எனவே, கவலை என்ற மூன்றெழுத்து உங்களை விட்டு விலகப் போகிறது. இருப்பினும், ஜென்மத்தில் உள்ள கேது, திடீர் திடீரென சிக்கல்களை உருவாக்கலாம். நண்பர்களை நம்பிச் செய்யும் காரியங்களால் துன்பங்களையே சந்திக்க நேரிடும்.

இன்பங்களை மட்டுமே நீங்கள் சந்திக்க வேண்டுமானால், இறைவழிபாட்டை இருபத்தி நான்கு மணிநேரமும் மேற்கொள்ள வேண்டும். தொழில் ஸ்தானத்தில் வீற்றிருந்து அருள் வழங்கும் குருவும் வக்ரம் பெறுகிறார். எனவே, வியாபாரத்தில் புதிய யுக்தியைக் கையாண்டு வெற்றிக் கொடி நாட்டப் போகிறீர்கள்.

சுக்ரன் பலம் இழந்தால் பொன்னை விற்கவைக்கும். செவ்வாய் பலமிழந்தால் மனையை விற்க வைக்கும். அதுபோன்ற ஒரு சூழ்நிலை, இம்மாதம் 21 ஆம் திகதி முதல் ஏற்படுகிறது. அன்றுதான் செவ்வாய், கன்னி ராசிக்குச் செல்கிறார். இதனால் ஏற்கனவே வாங்கிவைத்திருநத் மனையைக் கொடுத்து விட்டு, புதிய இடத்தில் வீடு கட்டத் தொடங்குவீர்கள். நாலில் சஞ்சரிக்கும் சனி அர்த்தாஷ்டமச்சனி ஆவதால் எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். எனவே, எல்லோரையும் அனுசரித்துச் சென்றால் தான் நல்ல வாய்ப்புக்களை நாளும் வரவழைத்துக்கொள்ளலாம்.

ஜூலை 22ஆம்திகதி சிம்ம ராசியில் சஞ்சரிக்கப் போகும் புதனின் பலத்தால், புதிய வாய்ப்புக்கள் வாயில் தேடிவரும். பொருளாதார நிலை மேலோங்கும். மன்னன் அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனியை கொடுத்தது போல, உங்களுக்கு யாராவது வெற்றிக் கனியைக் கொண்டு வந்து கொடுக் கப் போகிறார்கள். சுக்ர பெயர்ச்சியால், சுற்றத்தார் பாராட்டும் வாழ்க்கை உங்களுக்கு அமையப் போகிறது. அந்த நாள் தான் ஆகஸ்ட் 2ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் நீச்சம் பெறுவதால் நீங்கள் எண்ணிய காரியங் களில் இருந்த இடையூறுகள் அகலும்.

இம்மாதம் பாற்கடலில் துயிலும் பரந்தாமனை வழிபட்டால், வாழ்க்கை வளமாக அமையும்.

உங்கள் ராசிக்கு 7, 10 க்கு அதிபதியான குரு 10 ஆம் இடத்தில் வக்ரம் பெறுவதால், இது ஒரு பொன்னான காலமாகும். புதிய வாய்ப்புக்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். தொழிலில் மாற்றம் செய்ய வேண்டும் என்று விரும்புவர்களுக்கு இது ஒரு மகத்தான காலமாகும். ஏமாற்றங்களைக் காணாமல் இனிய மாற்றங்களைக் காணப் போகிறீர்கள். தாமாக உதவ பலரும் முன்வருவர். வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

ஆடி மாதம் பெண்களுக்கு அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்வது நல்லது. மகனைப் பற்றியும், மகளைப் பற்றியும் கவலை மேலோங்கலாம். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள்.மருத்துச் செலவுகள் கூடும். கடைசி வாரம் காசு, பணப்புழக்கம் அதிகரிக்கும்.

## கடகம்

*(புனர்பூசம் 4ஆம்பாதம், பூசம், ஆயிலியம்)*

**சாதனை நிகழ்த்தி சரித்திரத்தில் இடம் பிடிப்பவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிக்கும் கடக ராசி நேயர்களே !**

தலைமைப் பதவிக்கு தகுதியானவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுபவர்கள் நீங்கள். எவ்வளவு பிரச்சினை வந்தாலும், நீங்கள் தன்னம்பிக்கையோடு முயற்சிப்பீர்கள். கூட இருந்தே குழி பறிப்பவர்களை நீங்கள் இனம் கண்டு கொண்டால், கொள்கைப் பிடிப்போடு தொடர்ந்து வாழ இயலும். மேடைகளில் காட்சியளித்து புகழ் பெறுபவர்களும் நீங்கள் தான். மேன்மை தங்கிய மக்களின் மனதில் இடம் பிடிப்பவர்களும் நீங்கள் தான்.

ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, ராசிநாதன் சந்திரன் சனியோடு கூடி, குருவால் பார்க்கப்படுகிறார். எனவே, குரு சந்திரயோகம் செயல்படப் போகிறது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் ஒவ்வொன்றாக வெற்றிபெறும். உங்கள் ராசியில் சூரியன் பலம் பெறுவதால், அரசு வழியில் அனுகூலம் கிடைக்கும். பொது வாழ்வில் புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்துசேரும்.

உங்கள் ராசியைப் பார்க்கும் குரு, மீனத்தில் வக்ரம் பெறுகிறார். 6க்கு அதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான் என்றாலும், 9க்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் இந்த வக்ர காலத்தில் திடீர் மாற்றங்கள் பலவற்றை சந்திக்க நேரிடும். நல்ல மாற்றங்கள் வந்து சேர குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

ஜூலை 21 ஆம் திகதி கன்னி ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 5,10க்கு அதிபதி 3இல் சஞ்சரிக்கும் பொழுது, உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும். பூர்வீக சொத்துகளை விற்று புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். குழந்தைகளின் கல்வி நலன் கருதி ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். உறவினர்களை விலக்கி விட்டு மாற்றினத்தவர்களைச் சேர்க்க முனவருவீர்கள். செவ்வாய், சனி சேர்க்கை ஏற்படுவ்தால், எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லைகள் வந்து அகலும். ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்க அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

ஜூலை 22 ஆம் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். பன்னிரெண்டுக்கு அதிபதி இரண்டில் சஞ்சரிக்கப் போவதால், விரயத்திற்கேற்ற பணம் வந்துகொண்டே இருக்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். மின்சாதனப் பொருட்களை வாங்கி மகிழ்வீர் கள். ஆகஸ்ட் 2ஆம் திகதி கன்னி ராசியில் சஞ்சரிக்கப் போகும் சுக்ரனின் ஆதிக்கத்தால் பெண்வழி பிரச்சினைகள் அகலும்.வீடு கட்டும் முயற்சியில் இருந்த தடை மாறும். அந்நிய தேச பயணம் கூட எண்ணியபடியே கைகூடும். இம்மாதம் நன்மைகள் அனைத் தும் நடைபெற நந்தி தேவர் வழிபாட்டை மேற் கொள்ளுங்கள்.

### சிவல்புரி சிங்காரம்

உங்கள் ராசிக்கு 6,9க்கு அதிபதியான குரு 9 ஆம் இடத்தில் வக்ரம் பெறுகிறார். எனவே, உறவுகள் பகையாகலாம். உதவி செய்தவர்கள் எதிரிகளாகலாம். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புக்கள் மாறலாம். மதிநுட்பத்தால் நீங்கள் மகத்தான காரியங்களைச் செய்தாலும், மக்கள் அதைப் பாராட்ட மறுப்பர். எது நடந்தாலும் நன்மைக்கே என்று இருக்கவேண்டிய நேரமிது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

உங்கள் சாமர்த்தியமான நடவடிக்கையால், குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் பிரச்சினையில் மூன்றாம் நபரை நுழைக்கவேண்டாம். கணவன் -மனைவி உறவில் கனிவுகூட , தென் முகக் கடவுள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகலாம். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் எதிர்பார்த்த படியே நடைபெறும். (தொடரும்)




வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட சாந்தை கிராமத்தில் உள்ள விநாயகர் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் திறந்த பாடசாலை திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் திறந்த பாடசாலை வலய இணைப்பாளர் ந.சண்முகராஜா, திறந்த பாடசாலை சிரேஷ்ட போதனாசிரியர் அ.ஸ்ரீஸ்பரலிங்கம், சாந்தை சித்தம்பல பாடசாலை அதிபர் எஸ்.அன்ரன் மரியதாஸ் ஆகியோர் நிற்பதையும், பிரதமவிருந்தினரால் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்படுவதையும் விழாவில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# நிறைவேற்றதிகார பிரதமர் முறைமைக்கு — ஆதரவளிக்கப்படமாட்டாது —

## ஜே.வி.பி அறிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமைக்கு ஆதரவளிக்கப்படமாட்டாது என ஜே.வி.பி. கட்சி அறிவித்துள்ளது.

அமைச்சரவைக்கும் பாராளுமன்ற திற்கும் அதிக அதிகாரங்கள் வழங்கப்படக் கூடிய வகையில் , அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டுமெனக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் காணப்படும் பொறுப்புக்களையும், அதிகாரங்களையும் நிறைவேற்று பிரதமர் ஒருவரிடம் ஒப்படைக்கும் செயன்முறைக்கு தமது கட்சி ஆதரவளிக்கத் தயாரில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் சாசனத் திருத்தங்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் நோக்கத்தை அறிந்துகொள்ளாது பேச்சுவார்த்தைகளில் ஈடுபவதில் அர்த்தமில்லையெனவும் ஒரு வருடகாலத்தில் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு நிறைவேற்று அதிகார பிரதமருக்கு அதிகாரம் இருக்கின்றதா, நிறைவேற்று அதிகார பிரதமருக்கு எதிராக வழக்குத் தொடரமுடியுமா என்பது தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (6)

# இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி அதிகரித்துள்ளது

## மத்திய வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி வீதம் கடந்த வருடத்தை விட அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அந்த வகையில் மேல்மாகாணத்தின் மொத்த தேசிய உற்பத்தியானது, 45.1 வீதத்திலிருந்து 45.4 வீதமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், எவ்வாறாயினும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய உற்பத்தி வீதமானது சீரான முறையில் அதிகரித்துள்ள அதேவேளை, வடமாகாணத்தின் மொத்த தேசிய உற்பத்தி 3.2 வீதத்திலிருந்து 3.3 வீதமாக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்நிலையில், மேல்மாகாணத்தின் முதலீட்டு வருமானம் 3 ஆயிரத்து 259 அமெரிக்க டொலர்களாக உள்ளதுடன் இந்த வருமானமானது 1.6 வீத அதிகரிப்பைக் காட்டுவதாக இலங்கைமத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது. (6)

# இலங்கை இராணுவத்தின் புதுக்கோபம் நடுக்கடலில் நிர்வாண சித்திரவதை

"தவிக்கும் ஈழத் தமிழ் இனத்துக்காகக் குரல் கொடுக்க மறுப்பவர்களின் மெத்தனம் தரும் துணிச்சல்தான் சிங்கள ராணுவத்தின் உருவில் வந்து அடுத்தடுத்து கடலில் மடக்கிக் கொல்கிறது தமிழக மீனவனை!

இன்னும் எத்தனை நாட்கள் இந்தத் துயர் எங்களுக்கு?" என்று கதறல் கேட்கிறது தென்கோடிக் கரையோரம்! கடந்த 6 ஆம் திகதி நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் இருந்து கடலில் மீன் பிடிக்கச் சென்றனர் மீனவர்கள். அதில் ஒரு படகில் இருந்த மீனவரை அடித்துக் கொன்றும், இன்னொரு படகில் இருந்தவர்களை அடித்துத் துவைத்து நிர்வாணப்படுத்தியும், தனது குரூரத்தை அரங்கேற்றி இருக்கிறது இலங்கை இராணுவம்.



கோடிமாரி

வெள்ளப்பள்ளம் கிராமமே சோகத்தில் ஆழ்ந்திருக்க...... பலியான செல்லப்பனின் வீட்டுக்குச் சென்றோம். அவர் மகன் கோடிமாரி பேசும் மன நிலையிலேயே இல்லை. "அரை வயித்துக் கஞ்சிக்காக உசுரப் பணயம்வெச்சிப் பொழைக்கிற எங்களுக்கா இந்த நெலைமை வரணும்?" என்று மட்டும் கேட்டவருக்கு அதற்கு மேல் வார்த்தைகள் வரவில்லை.



செல்லப்பன் உடலைப் பார்த்து கதறும் உறவினர்கள்...

செல்லப்பனோடு படகில் சென்ற திருவன்புலம், "கடந்த 7 ஆம் திகதி காலை 10 மணிக்கு படகு எடுத்துப் போய் நடுக்கடல்ல வலையைப் போட்டுட்டு, சாப்புட உக்காந்தோம். அப்ப இலங்கை இராணுவக்காரங்க எங்க போட்டுக்குப் பக்கத்துல வந்து அவங்க போட்டை நிறுத்தினாங்க.

திமுதிமுன்னு எங்க போட்டுல குதிச்சாங்க. ஆறு பேர்ல ஒருத்தன் நீங்க இந்தியாதானடா? இன்னு கேட்டு துப்பாக்கியை எடுத்து எங்க நெத்தியில் வைச்சான். நாங்க கை இரண்டையும் மேல தூக்கிட்டு 'ஆமா' ன்னோம். வேற எதுவுமே எங்ககிட்ட கேட்காம, ஒரு மணி நேரம் எங்க எல்லாரையும் கையாலையும் கயித்தாலும் மாறிமாறி அடிச்சாங்க.

அடி தாங்க மாட்டாம கொஞ்ச நேரத்துலயே செல்லப்பன் மயங்கி விழுந்தாரு. ஆனா, அவங்க ஒரு மணி நேரம் வரை எங்க போட்டுலலேயே இருந்தால செல்லப்பனைத் தூக்கி முதுலுதவிகூட செய்ய முடியல வெறி தீரும் வரைக்கும் துன் புறுத்தி முடிச்சிட்டு எங்க வலைகளை அறுத்துக் கடல்ல விசிட்டு, ஓடுங்கடா என்னு' விரட்டினாங்க அப்ப இரவு மணி 8.30 இருக்கும். அதுக்குப் பிறகு செல்லப்பனை நாங்க எழுப்ப அவருக்கு பேச்சுமூச்சே இல்லை என்ற திருவன்புலம் முகத்தில் இன்னும் பயம் தெளியவில்லை!



திருவன்புலம்

இன்னொரு படகில் சென்ற முருகேசன் "இலங்கை இராணுவக்காரங்க எங்களை அடிச்சு... மிதிச்சிட்டு எங்க டிரெஸ்ஸை எல்லாம் கழட்டி,ஜட்டியையும் கழட்டச் சொன்னாங்க. எல்லாரும் கழட்டிட... நான் மட்டும் 'மாட்டேன்'னேன். அடி உதைச்சு கம்பால குத்துனாங்க.

## நம்மநாட்டு ரோந்துக் கப்பல் வந்தா ஏன் இப்படி நடக்குது!

வலி தாங்க முடியாம நானும் ஜட்டியைக்கழட்டினதும் எங்க டிரெஸ் நாங்ககொண்டு போன வலை பொருள் எல்லாத்தையும் எடுத்துக் கடலுக்குள்ள விசிட்டு 'ஓடுங்கடா நாய்களே'ன்னு விரட்டி அடிசானுங்க விடியக் கால கரைக்கு வந்த நாங்க,கரையோரத்தில படகை நிறுத்திட்டு, சத்தம் போட்டுத் துணி எடுத்துக்கிட்டு வரச்செல்லி அதை இடுப்புல கட்டிட்டுத்தான் கரைக்கு வந்தோம். பிறகுதான் இன்னொரு படகில் இருந்த செல்லப்பன் இறந்துபோன விஷயமும் தெரிய வந்தது" என்றவரிடம், "நம் நாட்டு ரோந்துக் கப்பல் நீங்கள் மீன் பிடிக்கும் இடத்துக்கு வருவதில்லையா?" என்றோம்.



முருகேசன்

"எப்பயாவது அத்தி பூத்தமாதிரி வந்துட்டுப் போகும். அடிக்கடி நம்ம ரோந்துக் கப்பல் வந்தா.... இலங்கைக்காரன் நம் எல்லையில் தேடி வந்து இத்தனை தைரியமா அப்படிப்பானா?" என்று கேட்டார். வேதனையோடு.

வெள்ளப்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயா சுப்ரமணியன், "காலையில 4 மணிக்கு செல்லப்பன் இறந்த தகவலைச் சொன்னாங்க.

உடனே போய்ப் பார்த்துட்டு, காவல்துறை, மீன்வளத்துறை அதிகாரிகளுக்குத் தகவல் சொன்னேன். அவங்களும் வந்து, விசாரணை செஞ்சாங்க. அதுக்குப் பிறகு செல்லப்பன் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்ய வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு போனோம். அங்க டாக்டரும் உதவியாளர்களும் இல்லை. நாகப்பட்டினம் கொண்டு போங்கன்னாங்க. உயிருக்குப் போராடுறவங்கள கொண்டு போனா டாக்டர் இல்லை மருந்து இல்லைன்னு நாகப்பட்டினம் கொண்டு போகச் சொல்வாங்க.

ஆனா செத்துப்போன ஒருத்தர் உடலை போஸ்ட்மார்ட்டம் செய்யவும் ஆள் இல்லேன்னா வேதாரணயத்துல அரசு ஆஸ்பத்திரி எதுக்கு? நொந்துபோன நாங்க உடலை அங்கேயே வைத்துவிட்டுப் போராட்டம் செய்ய முடிவெடுத்தோம். அதிகாரிகள் எங்களை சமாதானப்படுத்தி உடலை நாகப்பட்டினம் கொண்டு போகவெச்சாங்க என்றவர்,

இந்திய அரசாங்கத்தால் குற்றவாளியா அறிவிக்கப்பட்ட இலங்கை அரசுப் பிரதிநிதிகளை எல்லாம்கூட இங்க அழைச்சு விருந்துவெச்சு உபசாரம் செய்ற அரசாங்கம் இனி நம்ம அப்பாவி மீனவர்களைக் கொல்ற இலங்கை இராணுவத்துக்கும் டெல்லியில் விருந்துவைப்பாங்க போலிருக்கு என்றார் காட்டமாக.



ஜெயா சுப்ரமணியன்

இது குறித்து நாகை மாவட்ட ஆட்சியர் முனியநாதனிடம் பேசியபோது, "செல்லப்பன் குடும்பத்துக்கு அரசு சார்பில் 3 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது.

அதோடு நமது நாட்டின் எல்லைக்குள்ளேயே மீனவர்களை மீன் பிடிக்குமாறு மீண்டும் அறிவுறுத்தியுள்ளோம்!" என்று மட்டும் சொன்னார்.

ஜூனியர் விகடன்

# இலங்கையில் நடந்த 'ஐபா' நிகழ்ச்சியை தமிழ்த்திரையுலகம் புறக்கணித்தது சரிதான்

## இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடந்த 'ஐபா' நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில்லை என்று தமிழ்த் திரையுலகம் முடிவு எடுத்தது சரிதான் என்றும் மிகவும் உணர்வுபூர்வமான விடயங்கள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த முடிவு சரியானதாகவே அமைந்திருக்கும் என்று இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஐரோப்பாவில் தன்னுடைய இசை நிகழ்ச்சிகளை நடத்த சென்றுள்ள அவர் அங்கே ஊடக நிறுவனம் ஒன்றுக்கு செவ்வி அளித்தார்.

பெரும் வரவேற்பைப் பெற்ற செம்மொழி மாநாட்டு பாடல் சில விமர்சனங்களையும் சந்தித்தது பற்றி கருத்து தெரிவிக்கையில், விமர்சனம் வரும் என்று எனக்குத் தெரியும். தமிழ் மொழி மாறிக்கொண்டே இருக்கிறது. 8 ஆம் நூற்றாண்டிலேயே இருக்கமுடியாது. அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும். இளைய தலைமுறை, மூத்த தலைமுறை உட்பட 3 தலைமுறைகள் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதை குறைகூறக்கூடாது என்றார்.

டில்லியில் நடைபெற உள்ள பொது நலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கான தீம் பாடலை உருவாக்கும் பணியில் தீவிர மாக இருப்பதாக சொல்லும் ஏ.ஆர்.ரகுமான் பெரிதும் எதிர்பா ர்க்கப்படும் எந் திரன் திரைப் படத்தின் இசை திருப்திகரமாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



உலகப் பொது மறையாக இருக்கும் திருக்குறளை இளைய தலைமுறைக்கு கொண்டு செல்லும் வகையில் அதற்கான இசை வடிவத்தை உருவாக்கும் எண்ணத் தில் இருப்பதாகவும் வேலைப்பளு காரணமாக அந்த பணி பிற்போடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# சோனியாகாந்தி மீது வழக்கு; நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை

(பாட்னா)

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை துர்க்காதேவியாக சித்திரித்த வழக்கில் சோனியாவை ஆஜராகுமாறு முசாப்பர்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2007 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநிலம் மொராதாபாத் காங்கிரஸ் அலுவலகத்தில் சோனியாகாந்தியை துர்க்காதேவியாக சித்திரித்த சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்ததாகவும் இது இந்துமத உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக அமைந்திருப்பதாகக் கூறி பீகார் மாநிலம் முசாப்புர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம், சோனியாகாந்திக்கு அழைப்பாணை அனுப்புமாறு உத்தரவிட்டது. எதிர்வரும் 29ஆம் திகதி சோனியா அல்லது அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது. (6)

# இணையத்தளத்தில் தமிழ் அகராதி ; அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கியது

(சென்னை)

சென்னை அண்ணா பல்கலைக்கழக ஆசிரியரும், கவிஞர் வைரமுத்துவின் மகனுமான மதன்கார்க்கி மற்றும் ஆசிரியர்கள் கீதா, ரஞ்சனி, ஷோபா ஆகியோர் சேர்ந்து இணையதளத்தில் தமிழ் அகராதியை உருவாக்கி உள்ளனர். இதை www. agaradhi. com என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்.

உலகமொழிகளில் வேறு எந்த அகராதியிலும் இல்லாத 20 சேவைகளை இது வழங்குகிறதெனவும் ஓர் இலவச இணைய அகராதியுமாகும். தமிழ்ச் சொல்லை உருவாக்குதல், பிழைத்திருத்தம், மாற்றுச் சொற்கள், சொற்களின் இனிமை, சொற்கள் பயன்பாடு, திருக்குறள் பயன்பாடு, பாரதியார் மற்றும் ஔவை பாடல்களில் உள்ள தமிழ்ச் சொற்களின் பயன்பாடு உள்பட பல்வேறு தமிழ்ச் சொல் பயன்பாடுகளை இந்த இணையத்தளத்தில் காணலாம்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் எளிமையாகப் பயன்படுத்தும் வண்ணம் இந்த அகராதி வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. எம்.ஐ.டி. கல்லூரியில் உள்ள ஏ.யு.கே.பி.சி. ஆராய்ச்சி மையம் சர்ச்கோ என்ற தமிழ் இணையதளத்தை (www.searchko.in) உருவாக்கி உள்ளது.

இது விரிவான ஒரு தமிழ் இணையதளம் ஆகுமெனவும் இதில் அரசியல், செய்திகள், திரைப்படங்கள், விளையாட்டு, சங்க காலம் மற்றும் தற்கால இலக்கியம், சித்த மருத்துவம், ஆயுர்வேதம், ஆங்கில மருத்துவம் தொடர்பான தகவல்கள், பொழுதுபோக்கு அம்சங்கள், மார்கழி இசை விழாக்கள் உட்பட பல்வேறு தகவல்களை அறிந்துகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# தமிழக அரசாங்கத்தினால் சீமான் பழிவாங்கப்பட்டுள்ளார்

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

ஈழத்தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் ஆதரவாகப் போராடுபவர்களை மிரட்டி ஒடுக்குவதற்காக சீமான் பழிவாங்கப்பட்டிருக்கிறார் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

இதுகுறித்து பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் ஏவப்பட்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். ஈழத் தமிழர்களுக்காகவும் தமிழக மீனவர்களுக்காகவும் குரல் கொடுத்தமைக்காக அவரை மிகக் கடுமையான சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்திருப்பது முற்றிலும் ஜனநாயக விரோதப் போக்காகும்.



ஈழத் தமிழர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் ஆதரவாகப்போராடுபவர்களை மிரட்டி ஒடுக்குவதற்காக சீமான் பழிவாங்கப் பட்டிருக்கிறார்.

கருணாநிதியின் இந்தக் கனவு ஒரு போதும் பலிக்கப் போவதில்லை. எத்தனை அடக்குமுறைகள் ஏவப்பட்டாலும் ஈழத்தமிழர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் ஆதரவான போராட்டங்கள் தொடரும் எனவும் நிலைமை முற்றுவதற்குள் சீமானை விடுதலை செய்யும்படி வலியுறுத்துகிறேன் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார். (6-2)

# சீமான் கைதுசெய்யப்பட்டமைக்கு வைகோ கண்டன அறிக்கை

(சென்னை)

தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதற்கு வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,



அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை தமிழ் நாட்டில் அடக்குமுறைதி.மு.க. அரசால் ஏற்பட்டுள்ளது. நெஞ்சை நடுங்க வைக்கும் வகையில் ஈழத் தமிழர்கள் படுகொலைகள் செய்யப்பட்டதால் நியாயமாக தமிழர்கள் மனதில் எழுகின்ற ஆவேச உணர்ச்சி, முத்துக்குமார் உள்ளிட்ட 17 பேர் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்யக் காரணமாயிற்று.

அதே உணர்ச்சி வேகத்தில் தான் சிங்கள அரசுக்கு எச்சரிக்கை செய்யும் நோக்கத்தில், நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர், இயக்குநர் சீமான் உரை நிகழ்த்தினார். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் குரல் எழுவதைத் தடுக்கவும் தமிழ் ஈழ ஆதர வாளர்களை மிரட்டி ஒடுக்கவும் திட்டமிட்டு இயக்குநர் சீமான் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தை முதல்வர் கருணாநிதி அமுல்படுத்தி உள்ளார்.

ஆனால்,ஈழத் தமிழர்களுக்காக பேசினால் கருணாநிதி, தேசிய பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துகிறார். சர்வாதிகாரப் போக்கில் ஆட்சி நடத்தும் தி.மு.க. அரசு, சீமான் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்தியதற்கு கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய அடக்குமுறையின் மூலம் எங்கள் ஈழ ஆதரவுக் குரலை ஒருபோதும் அடக்க முடியாது. அது மேலும் மேலும் வீறு கொண்டு எழும் என்று வைகோ தெரிவித்துள்ளார். (6-2)




# பாகிஸ்தான் - இந்தியா இடையில் பேச்சுவார்த்தை தொடரும்

## இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் தெரிவிப்பு



இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் கட்டாயமாக நடைபெறுமெனவும் இருநாடுகளுக்குமிடையில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் எந்தத் தடையும் இல்லை எனவும் இந்திய வெளிவிவகார செயலாளர் நிரூபமாராவ் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பாகிஸ்தானின் லாகூரில் இரு நாடுகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்ததாக வெளிவந்த செய்தியினை மறுத்திருக்கும் இந்திய வெளிவிவகார செயலாளர் நிரூபமாராவ் மேலும் கூறுகையில்,

பாகிஸ்தானில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காகவே இந்திய வெளிவிகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அங்கு சென்றிருந்தார். அவ்வேளையில் நட்பு ரீதியிலேயே பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஷா மொஹமட் குரேஷியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இக் கருத்தரங்கில் கலந்துகொள்வதால் இரு தலைவர்களுக்கும் உத்தியோகபூர்வ பேச்சுக்களில் ஈடுபட நேரம் இருந்திருக்காது எனவும் உத்தியோக பூர்வமான பேச்சுவார்த்தைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் தயாராக இருப்பதாகவும் எந்த பிரச்சினையினையும் பேசித் தீர்க்கலாம் என இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தன்னிடம் உறுதியளித்துள்ளதாகவும் பாகிஸ்தான் பிரதமர் யூஷுப் ரஸா கிலானி அந்நாட்டு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

அதேபோல் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சரும் இருநாடுகளுக்குமிடையில் நல்லெண்ணத்தை உருவாக்கும் பேச்சுவார்த்தைகள் நடைபெறக்கூடிய சாத்தியப்பாடு இருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# மெக்சிக்கோவில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் ஐவர் பலி

(மெக்ஸிகோ)

மெக்ஸிகோ நாட்டில் போதைப் பொருள் கடத்தல் கும்பலுக்கும் பொலிஸாருக்கும் இடையே அடிக்கடி சண்டை நடைபெற்று வருகிறது. போதைப் பொருட்களை கடத்தும்போது அவர்களை விரட்டிச் செல்லும் பொலிஸார் மீது போதைப் பொருள் கும்பலைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த கும்பலால் ஏற்பட்ட வன்முறையில் கடந்த ஜனவரிமாதம் முதல் யூலை மாதம் வரை 7 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். 2009ஆம் ஆண்டில் இந்த வன்முறைச் சம்பவங்களால் 9 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில் போதைப்பொருள் கடத்தும் கும்பலைச் சேர்ந்தவர்கள் சியுடாட் ஜீவாரஸ் நகரில் கார் வெடிகுண்டுத் தாக்குதலை 15 ஆம்திகதி நடத்தியுள்ளனர். காயமடைந்த ஒருவருக்கு, சியுடாட் ஜீவாரஸ் நகரப் பொலிஸ் அதிகாரி போல வேடமிட்டு காரில் அழைத்து வந்தனர். அவரை நகரிலுள்ள ஒரு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர். இதையடுத்து பொலிஸ் அதிகாரிதான் காயமடைந்துள்ளனர் என்ற எண்ணத்தில் மருத்துவ அதிகாரிகள் வெளியே வந்தனர். அப்போது வெளியிலிருந்த இந்த கும்பலைச் சேர்ந்



தவர்கள் காரிலிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர். இதில் 2 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 2 டாக்டர்கள் மற்றும் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்ற ஒருவர் பலியாகினர். மேலும் 11 பேர் காயமடைந் தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வழக்கமாக இந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கி கையெறி குண்டுகளைக் கொண்டு தாக்குதல் நடத்துவர். திட்டமிட்ட தாக்குதலாக கழுத்தை வெட்டிக் கொலை செய்தல் போன்ற செயல்களிலும் அவர்கள் ஈடுபடுவர். ஆனால் முதன்முறையாக மெக்சிகோவில் இது போன்ற கார் வெடிகுண்டு தாக்குதலை அவர்கள் நடத்தியுள்ளதுடன் இந்தக் கும்பலைச் சேர்ந்த தலைவர் ஜெசுஸ் அர்மான்டோ அகோஸ்டா என்பவரை சமீபத்தில் பொலிஸார் கைது செய்தனர். அதற்கு பதிலடி வழங்கும் விதமாக இந்தத் தாக்குதல் சம்பவத்தை இந்த கும்பல் நடத்தியதாகத் தெரிகிறது. இந்த சம்பவத்தையடுத்து சியுடாட் ஜீவாராஸ் நகரில் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (6-2)

## 96 ஆண்டுக்குப் பின் கிடைத்த சார்லி சாப்ளின் படம்

திரைப்பட முன்னோடியும் நகைச்சுவை நடிகருமான சார்லி சாப்ளின் நடித்து மாயமான திரைப்படம் 96ஆண்டுகளுக்குப் பின் கிடைத்துள்ளது.

ஆஃப்தி கேப்சர் என்ற 10 நிமிட நகைச்சுவை திரைப்படத்தில் சார்லி சாப்ளின் பொலிஸாக வருகிறார். 1914 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் படம் பிடிக்கப்பட்ட இத்திரைப்படம் பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது. அதன்பிறகு திரைப்படச் சுருள் மாயமானது.

இந்நிலையில் பழம்பொருட்களை சேகரிக்கும் ஒருவரிடம் ஆஃப் தி கேப்சர் படத்தின் படச் சுருள் கிடைத்துள்ளது.

காணமால்போன சாப்ளியின் படம் கிடைத்த மகிழ்ச்சி மட்டுமல்ல. இது அவர் தோன்றிய மூன்றாவது திரைப்படமாகும் என்று அவரது ரசிகர்கள் கூறினர். இந்த திரைப்படத்தை சிடிக்களாக மாற்றி பொது மக்களுக்கு விற்பனை செய்யயும் திட்டமிடப்பட்டுள்ளது. (6)

# அதிபர் ஒபாமாவுக்கு ஆதரவாக களமிறங்குகிறார் பில்கிளிண்டன்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடியை சரியாக கையாளவில்லை என அதிபர் ஒபாமா மீது மக்கள் அதிருப்தியில் உள்ளனர். அமெரிக்காவில் உள்ள 10 பேருக்கு 6 பேர் ஒபாமாவின் கொள்கை முடிவுகளை ஏற்கவில்லை. சமீபத்தில் நடந்த கருத்துக் கணிப்புகளில் இந்த தகவல்கள் வெளியாகின. எதிர் வரும் நவம்பர் மாதம் பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஒபாமாவின் செல்வாக்கு சரிந்துள்ளதால் அவருடைய ஜனநாயக கட்சி கவலை அடைந்துள்ளது.

இதையடுத்து ஒபாமாவுக்கு ஆதரவாக அமெரிக்க முன்னாள் அதிபரும் ஜனநாயக கட்சியின் முக்கிய தலைவர்களின் ஒருவருமான பில்கிளிண்டன் களமிறங்குகிறார். அமெரிக்காவில் பொருளாதார சீர்திருத்த



நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஒபாமாவுக்கு பக்கபலமாக கிளிண்டன் இருப்பார். தேர்தலுக்கு முன் நிலைமையை சரி செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (6)

# ஈக்வடோரில் இடம்பெறும் சட்டவிரோத படுகொலைகள் குறித்து ஐ.நா.கவனம்

ஈக்வடோரில் இடம்பெற்று வரும் சட்ட விரோதப் படுகொலைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத படுகொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்வதாக சட்டவிரோதப் படுகொலைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேடப் பிரதிநிதி பிலிப் அல்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கும் மேற்பட்ட படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதிலும் இது வரையில் ஒருவருக்கு மட்டுமே தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமையினால் ஈக்வடோர் மக்கள் பாதுகாப்பற்ற தன்மையை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் காத்திரமான விசாரணைகளை மேற்கொள்வதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

படுகொலை செய்வதற்காக கூலிப்படையினருக்கு 20 டொலர்கள் செலுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)




# நெல்சன் மண்டேலாவைக் கௌரவிக்கும் முகமாக சர்வதேச மண்டேலா தினம் பிரகடனம்

தென்னாபிரிக்கா தலைவர் நெல்சன் மண்டேலாவின் பிறந்த நாளான நேற்றைய நாளை ஐ.நா. சபை சார்பில் சர்வதேச தினமாகக் கொண்டாடப்படுகிறது. கறுப்பின மக்களின் விடுதலைக்காகவும் சமூக அமைதிக்காகவும் போராடிய தென்னாபிரிக்கா தலைவர் நெல்சன் மண்டேலாவின் 92ஆவது பிறந்த தினம் நேற்று முதன்முறையா சர்வதேச தினமாகக் கொண்டாடப்படுகிறது. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மண்டேலாவை கௌரவப்படுத்தும் நோக்கில் ஐ.நா. சபை அவரது பிறந்த தினமான யூலை 18ஆம்திகதியை ஆண்டுதோறும் சர்வதேச மண்டேலா தினமாகக் கொண்டாடப்படும் என கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அறிவித்தது.

அதன்படி அவரது பிறந்த தினம் நேற்று நெல்சன் மண்டேலா சர்வதேச தினமாகக் கொண்டாடப்படுகிறது. நெல்சன் மண்டேலா சர்வதேச தினம் முதன்முறையாக கொண்



டாடப்படுவதையொட்டி ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் விடுத்துள் அறிக்கையில் மண்டேலா பண பலம், அதிகார பலம் இல்லாமல் மக்களுக்காக போராட்டம் நடத்தி வெற்றி பெற்றவர் என புகழாரம் சூட்டியுள்ளார். (6-2)

# ஆஸியில் யார் ஆட்சி? ஒக்டோபஸ் ஜோதிடம் கணிப்பு

(மொஸ்கோ)

உலக கோப்பை கால்பந்து வெற்றி தோல்விகளை சரியாக கணித்து பேர் வாங்கியதால் ஒக்டோபஸ்கள் இப்போது அரசியலுக்கு வருகின்றன. இது உண்மைதான். ரஷ்யா, அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள தேர்



தலில் ஆட்சியை கைப்பற்றப் போவது யார் என்று ஒக்டோபஸ் ஜோதிடம் கணித்தாகி விட்டது.

அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் பொது தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் தற்போதைய பிரதமர் ஜூலியா ஜிலார்ட் தொழிலாளர்கள் கட்சி சார்பில் களத்தில் உள்ளார். எதிர்க்கட்சியான முற்போக்கு கட்சி சார்பில் போனி அபாட் நிற்கிறார். இவர்களில் யார் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள் என ஒக்டோபசிடம் ஜோதிடம் கணிக்க முடிபு செய்யப்பட்டது.

ஆனால் அதற்காக ஒக்டோபஸ் பாலை தேடி ஜெர்மனிக்கு போகவில்லை. சிட்னி கடல் அறிவியல் அருங்காட்சியகத்தில் உள்ள கேசன்ட்ரா என்ற ஒக்டோபசை களமிறக்கினார். அதன் தொட்டிக்குள் வேட்பாளர்களின் படங்கள் வைக்கப்பட்டன. அதன் முன்பு உணவு வைக்கப்பட்டது. நடுவில் விடப்பட்ட கேசன்ட்ரா நேராக பிரதமர் ஜுலியாவை தேர்ந்தெடுத்தது. ரஷ்யாவின் விடயமே வேறு அங்கு 2012இல் தான் அதிபர் தேர்தல் வருகிறது.

இப்போது பிரதமராக உள்ள விளாடிமிர் புடின் அதிபர் பதவிக்கு களமிறங்க திட்டமிட்டுள்ளார் அதிபராகவுள்ள மிட்ரி மெடதேவ் மீண்டும் போட்டியிடப் போவதாக தகவல் வெளியானது. இதற்கிடையே வெற்றி பெறபாவது யார் என்பதை ஒக்டோபஸ் பாலிடம் கேட்டுவிடமாஸ்கோவை சேர்ந்த பத்திரிகை முடிபு செய்தது. ஜேர்மனியில் பால் இருக்கும் அருங்காட்சியகம் அருகே வசிக்கும் நிருபருக்கு அந்த வேலை வழங்கப்பட்டது.

அவரும் எப்படியோ அதிகாரிகளிடம் அனுமதி பெற்று ஒக்டோபஸ் பாலை சந்தித்தார். அதன் தொட்டிக்குள் புடின் மெடதேவ் படங்களை வைத்தார்., வழக்கம்போல பால் தனது கணிப்பை கூறி விட்டது. ஆனால் தேர்தலுக்கு இன்னும் 2 ஆண்டுகள் இருப்பதால் ஒக்டோபஸ் யாரை தேர்வு செய்தது. என்பதை இப்போது அறிவிக்கப் போவதில்லை என்று பத்திரிகை அறிவித்து சந்தேகத்தில் வைத்துள்ளது. 6-2)

# ஐரோப்பிய நாடுகளில் வெப்பம் அதிகரிப்பு

(மொஸ்கோ)

ஐரோப்பிய நாடுகளில் வெயில் கொளுத்துகிறது. ரஷ்யாவின் ஊரல் மலைப் பகுதியில் இருந்து மேற்கு ஜேர்மனி வரை கடந்த ஒருவார காலமாக வெப்ப அலை வீசுகிறது. ஐரோப்பாவின் வடக்கு பகுதியில் 30 டிகிரி செல்ஷியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது.

ஜேர்மனியில் 50 டிகிரி செல்ஷியஸ் வெயில் பதிவாகியுள்ளதுடன் இதனால் ரயில் பெட்டிகளில் குளிர்சாதன இயந்திரங்கள் பல தடவை பழுதாகி விட்டன.

கொளுத்தும் வெப்பத்தை தாங்க முடியாமல் ஜெர்மனியர்கள் நீச்சல் குளங்களையும் கடற்பகுதிகளையும் மொய்த்தனர். ஆறுகளையும் ஏரிகளையும் தேடிச் சென்றனர். எஸ்டோனியாவில் உள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்கள் வெயிலில் இருந்து பாதுகாப்பு அளிப்பவையாகவும் நிழல் தரும் மையங்களாகவும் உள்ளன. பின்லாந்து நாட்டில் கடைகளில் இருந்த மின்விசிறிகள், ஏயர் கண்டிஷனர்கள் எல்லாம் விற்று தீர்ந்தன. (6)

# தமிழ் மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையானது அம்மக்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

அவசர காலச் சட்டத்தை தளர்த்தி பொலிஸ் நிலையங்களில் இனிமேல் பொது மக்கள் பதிவு செய்யப்படமாட்டார்கள் என அமைச்சர் பீரிஸ் நாடாளுமன்றத்தில் அறி வித்திருந்த நிலையில் அதற்கு முரணாக தமிழ் மக்களை மீண்டும் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்து பதிவு செய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

மேல் மாகாணத்தின் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை போன்ற பிரதேசங்களில் இந்த பதிவு மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அத்துடன் இதன் ஊடாக தமிழ் மக்களிடம் சந்தேகத்திற்கு இடமான விடயங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத் தப்பட்டு வருவதாக ஜனநாயக மக்கள் முன்னணயின் தலைவர் மனோகணேசன் தெரி வித்துள்ளார். தமிழ் மக்களை அசௌகரியத் திற்கு உள்ளாக்கி அவர்களை சந்தேகத்திற் குரியவர்களாக மாற்றும் வேலைத்திட்டத்தை நிறுத்த தலைமீடுகளை மேற்கொள்ளுமாறு மனோகணேசன் கடந்த 12ஆம் திகதி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது குறித்து குறித்து கருத்து வெளியிட் டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார ,இது தமிழ் மக்கள் மனங்களில் மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கை எனவும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தும் பாரிய அநீதி எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தான் இது குறித்து ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பொலிஸ் பேச்சாளர் பிர சாந்த ஜயகொடி, முன்னர் பதிவு நடவடிக்கைகள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் மேற்கொள் ளப்பட்டு வந்ததாகவும் பொலிஸார் கட்டளைச் சட்டத்தின் 79வது சரத்தின் பொலிஸ் பொறுப் திகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களுக்கு அமைய தற்போது இந்த பதிவுகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள் ளார்.

பதிவு செய்யப்படாத புதியவர்கள் இருக் கும் வீடுகளில் உள்ளவர்கள் இவ்வாறு பதிவு செய்யப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். வெள்ளவத்தை பகுதியில் 491 பேர் இது வரை பதிவு செய்துள்ளதாகவும் பொலிஸாரின் அறிவிப்புக்கு அமைய தம்மை பதிவு செய்து கொள்வதற்காக தினமும் தமிழ் மக்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்வதாகவும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி கருணாதாச தெரிவித்துள்ளார். (6)

## 6 பிராந்திய வங்கிகளையும் ஒன்றிணைத்து பிராந்திய அபிவிருத்தி வங்கியாக மாற்றம்

இலங்கையில் உள்ள ஆறு பிராந்திய வங்கிகளையும் இணைத்து ஒரு பிராந்திய அபிவிருத்தி வங்கியாக செயற்படுத்தப்பட வுள்ளது. கொழும்பில் அமையப்பெற்றுள்ள இதன் தலைமை காரியாலயத்தை நேற்று முன் தினம் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் திறந்து வைத்தார்.

இவ்வாறு ஒரு வங்கியாக இணைக்கப் பட்டதன் பிரதான நோக்கம் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களை ஊக்குவிப்ப தெனவும் தற்போது இவ்வங்கிக்கு 42 பில்லியன் பெறுமதியான சொத்தும் நாடளாவிய ரீதியில் 251 கிளைகளும் உள்ளனவெனவும் எதிர்வரும் மாதங்களில் இதன் கிளைகளை விரிவுபடுத்தபடவுள்ளதாக குறிப்பிடப்படுகி றது. முன்னர் ரஜரட்ட, ருகுணு, வயம்ப, ஊவா, கந்துரட்ட மற்றும் சப்ரகமுவ ஆகிய ஆறு பிராந்திய வங்கிகள் காணப்பட்டன என தெரிவித்தார். (6-2)

## மட்டு சிறைக் கைதிகளுக்காக சிறைச்சாலையில் நூலகம்

முதன் முறையாக மட்டக்களப்பு சிறைச் சாலையில் உள்ள சிறைக் கைதிகளின் தகவல் தொழில்நுட்ப அறிவையும் வாசிப் புத்திறனையும் அதிகரிக்க நேற்று முந்தி னம் தகவல் தொழில்நுட்பப்பிரிவு நூலகமும் திறந்து வைக்கப்பட்டது.

வேல்ட் விசன் நிறுவனம் வழங்கிய கணனிகள் மற்றும் நூல்களைக்கொண்டு இந் நிலையம் திறக்கப்பட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் கித்சிறிபண்டார தெரிவித்தார். வேல்ட்விசன் நிறுவனமாவட்ட முகாமையாளர் எஸ்.பிரேமச்சந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந் நிலையத்தை திறந்து வைத்தார். (6)

## வெளிநாடுகளில் இயங்கும் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைக் கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

புலிகளின் சர்வதேச வலயமைப்பை முற்றாக முடக்கும் வகையில் சர்வதேச பொலிஸ் ஊடகவும் சர்வதேச புலனாய்வுத் முகவர் அமைப்பின் ஊடாகவும் அரசாங் கம் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வெளிநாடுகளில் இயங்கும் புலிகளின் இரு முக்கியஸ்தர் களைக் கைது செய்வதற்கு சர்வதேச பொலி ஸாரினால் நடவடிக்கை எடுத்து வரப்படுகி றது. புலிகளின் சர்வதேச இணைப்பாளரான காஸ்ட்ரோவின் வன்னி அலுவலகத்தில் இலங்கை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட இரகசிய ஆவணங்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறதுடன்,

அமெரிக்காவைச் சேர்ந்த ஐயா அல்லது ராஜா எனப்படும் பொன்னையா ஆனந்த ராஜாவை சர்வதேச பொலிஸார் தேடி வரு கின்றனர். 60 வயதான இவர் யாழ்ப்பாணம் சங்கானையைச் சேர்ந்தவராவார்.

இவர் 2003ஆம் ஆண்டிலிருந்து புலி கள் இயக்கத்திற்கு ஆயுதக் கொள்வனவி லும் கப்பல் வலையமைப்பிலும் செயற்பட் டுள்ளதுடன் சர்வதேச பொலிஸாரால் தேடப் படும் இன்னொருவரான அச்சுதன் சிவராஜா அல்லது பிருந்தாவன் அச்சுதன் என்பவர் பிரான்சிலுள்ள விமான பயிற்சிப் பாடசா லையில் விமானியாக பயிற்சி பெற்றுள்ளார் எனவும் பின்னர் பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்று திருமணமாகி இரண்டு குழந்தைக ளுடன் மத்திய கிழக்கு நாடொன்றில் வசித்து வருகிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் புலிகளுக்கு விமானங்களைக் கொள்வனவு செய்வதில் பொறுப்பு வகித்தி ருக்கிறார் என்றும் அதேநேரம் புலிகள் இயக் கத்தில் முதலீடு உள்ளிட்ட பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதாகவும் மேற்படி அச்சுதன் என்பவர் வன்னிக்கு முன்பு அனுப்பி வைத்திருந்த ஒளிப்பதிவு நாடாக்கள் மற்றும் ஆவணங்களை பாது காப்புப்படையினர் கைப்பறியுள்ளதாக தெரி வித்துள்ளனர்.

இதேவேளை புலிகளின் தற் கொலை யாளி களுக்கு பயிற் சிகளை வழங் கியுள்ள மையும் வன்னி ஆவ ணங்கள் மூலம் தெரியவந் துள் ளது என்று குறிப் பிடப்படுகிறது.

இ வ் வி ரு வரையும் தவிர ஐரோப் பாவைச் சேர்ந்த நரேந் திரன் தென்கிழக் காகிய நாடுகளில் செயற் படும் ரூபன் மற் றும் பவீந்திரன் ஆகியோரும் புலிகள் இயக் கத்திற்கு கப்பல் மற்றும் ஆயுதங்களைக் கொள்ளவனவு செய்திருப்பது தெரிய வந் துள்ளதாகவும் இலங்கை அதிகாரிகள் கைப் பற்றிய புலிகளின் ஆவணங்களின் அடிப் படையான விசாரணைகளையடுத்து புலிக ளின் முக்கியஸ்தர்கள் பலர் கைது செய்யப் படலாமென நம்பப்படுகிறது.

பிரிட்டன், நோர்வே, அமெரிக்கா ஆகிய நாடுகளில் செயற்படும் புலிகளின் மூன்று பிரிவுகளின் தகவல்களையும் பெற்றுத்தரு மாறு புலனாய்வுப்பிரிவு ஊடாக அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த அருட்தந்தை இமானுவேல் பிரிட்டனிலும் நெடியவன் பிரிவினர் நோர்வேயிலும் உருத் திரகுமாரன் பிரிவினர் அமெரிக்காவிலும் செயற்பட்டு வருவதாகவும் இந்த வருடத்தில் ஜேர்மனியில் 5 புலிச் சந்தேக நபர்களும் நெதர்லாந்தில் எட்டு பேரும் இதுவரை கைது செய்யப்பட்டு இருக்கின்றனர் எனவும் குறிப் பிடப்படுகிறது.

இலங்கை அரசின் வேண்டுகோளுக்கு இணங்க பல்வேறு நாடுகள் அவற்றின் புலனாய்வு வலையமைப்பை விரிவுபடுத் தியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின் றன. (6-2)

## கனடாவை நோக்கி புறப்பட்ட அகதிகள் கப்பல் கௌதமாலாவில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஈழத்தமிழ் அகதிகள் சுமார் 200 பேருடன் கனடாவை நோக்கி புறப்பட்டிருக்கின்ற தாய்லாந்து நாட்டு ஒரு சரக்குக்கப்பல் சந்தேகத்தின் பேரில் கௌதமாலா நாட்டிற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எம்.பி.சன்.சீ.என்கிற இக்கப்பல் நேற்று முன்தினம் இந்நாட்டுக்கு அருகில் வந்துள்ளது.

இதில் 219 ஈழத் தமிழர்களும் 12 இந்தியத் தமிழர்களும் வந்திருக்கின்றார்கள்என்று தெரிவிக்கப்படுகிறதுடன் இக்கப்பல் முதலில் ஆஸ்திரேலியா செல்ல இருந்தது என்றும் அந்த முயற்சியைக் கைவிட்டு பிரித்தானிய கொலம்பிய கடலூடாக கனடாவை நோக்கி புறப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

## ஆசியாவின் மிகப்பிரபலமான இடமாக தாஜ்மகால் தெரிவு

(வோஷிங்டன்)

உலக அதிசயங்களில் ஒன்றாக இந்தியாவின் தாஜ்மஹால் விளங்குகிறது. தற் போது ஆசியாவின் மிகப் பிரபலமான இட மாக தாஜ்மஹால் தெரிவு செய்யப்பட்டுள் ளது. மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் 2010ஆம் ஆண்டுக்கான ஆசிய கண்கவர் கண்காட்சி நடந்து வருகிறது. இந்த கண் காட்சியில் சர்வதேச பொழுது போக்கு பூங்கா சங்கம் சார்பில் ஆசியாவின் கண் கவர் விருது வழங்கும் விழா நடந்தது.

இதில் 6 விதமான பிரிவுகளில் ஆசி யாவில் பிரபலமான இடங்களை தேர்வு செய்ய போட்டி நடத்தப்பட்டது. இதற்காக மொத்தம் 94ஆயிரத்து 99 பேர் வாக்களித் தனர். அவர்களில் அதிமானவர்கள் தாஜ் மஹாலை தெரிவு செய்தனர்.

இதன் மூலம் ஆசியாவின் மிகப் பிரபலமான இடமாக தாஜ்மகால் தெரிவு செய்யப்பட்டது. (6)


மணிவிழா நாயகனே வாழி



திரு.சின்னத்தம்பி சித்திரவடிவேல்
கோட்டக் கல்விப் பணிப்பாளர் , கோப்பாய்

மாணவர் சேவையே மகேசன் சேவையாய்
நல்லாசிரியராய் பின் நல்லதிபராய்
கோட்ட அதிபர் சங்கத்தின் தன்னிகரில்லாத் தலைவனாய்
கோட்டக்கல்விப் பணிப்பாளராய் இருந்தோய் வாழி!

அதிபர்,ஆசிரியர்கள்
கல்வி சாரா ஊழியர்கள் ,
சைவத்தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய்.

எனது கைகள் இறைவனை வணங்கியது. ஆனால் எனது உள்ளம் அதைச் செய்ய வில்லை. -முனைவர் உலகநாயகி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நல்லூர் முருகா! நீதான் துணை!

நல்லூர்க் கந்தப்பெருமானின் 2010ஆம் ஆண்டிற்கான மகோற்சவம் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. 2006ஆம் ஆண்டு நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் நடந்தபோது முருகப்பெருமான் வெளி வீதிவரமுடியாமல் போயிற்று.

தேர் ஓடுவதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போக முருக பக்தர்கள் உள்ளத்தால் அழுதனர்.

முருகா! ஏன் இப்படி என்று வெதும்பினர். ஊரடங்கு உத்தரவின் மத்தியில் முருகனின் மகோற்சவம் நடந்தேறியது.

2006ஆம் ஆண்டு ஊரடங்குச் சட்டத்தால் மிகக் குறைந்த பக்தர்களே மகோற்சவத்தில் பங்கேற்றனர். இந் நிலைமை அப்போது பெரும் குறைபாடாக இருக்க,

தற்போது அந் நிலைமை மாறி இலட்சக்கணக்கானோர் திருவிழாவில் பங்கேற்பர் என்ற ஏக்கம் ஏற்பட்டுள்ளது.

ஆம்! ஏ9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்பகுதி மக்கள் நாள்தோறும் யாழ்ப்பாணத்திற்கு வந்தவண்ணம் உள்ளனர்.

இவ் விதம் வருகின்றவர்கள் நல்லூர்க்கந்தனின் கோவிலுக்குச் செல்லாமல் விடுவதில்லை.

நிலைமை இதுவாக இருக்கின்றபோது, நல்லூர் மகோற்சவ காலம் பாடசாலை விடுமுறைக் காலமாகவும் இருப்பதால், இலட்சக்கணக்கான சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திற்கும் நல்லூருக்கும் வந்துசெல்வர்.

கூடவே வெளிநாடுகளில் இருக்கும் நம்மவர்களும் நல்லூர் கந்தனின் திருவிழாவுக்கு நிச்சயம் வருவர்.

இவ்வாறு வருகின்றவர்களுக்கு தென்பகுதி மக்கள் நல்லூர் மகோற்சவத்தில் கலந்து கொள்வது விசித்திரமாக காட்சிஅளிக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

வெளிநாட்டிலிருந்து இங்கு வரும் நம்மவர்கள் இது தொடர்பில் எடுக்கும் வேறுபட்ட முடிவுகள், விமர்சனங்கள் வெளிநாடுகளிலும் எதிர் ஒலிக்கும்.

எனவே நல்லூர் மகோற்சவத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றை ஏற்படுத்த சகலரும் ஒத்துழைப்பு வழங்குவது கட்டாயமானதாகும்.

24 மணி நேரமும் வீதித்தடை அமுலில் இருக்கும் என்ற யாழ்.மாநகர சபையின் முடிவு பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக இருக்கின்றது.

அதேநேரம் நல்லூர்க் கந்தனின் மாலை நேர திருவிழாவை மாலை ஆறு மணிக்குள் பூர்த்தியாக்குவதும் மக்களின் நெரிசலையும் தேவையற்ற சிக்கலையையும் தவிர்க்க உதவும் என்பது எமது கருத்து.

எதுவாயினும் நல்லூர் மகோற்சவ காலத்தில் தெய்வீகத்தன்மையை நல்லூர்ப்பதியில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இது மிகவும் அவசியமானதாகும்.

# மண்டைதீவு மக்களின் தேவையை நிறைவேற்ற அபிவிருத்திக் குழு அமைக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளிப்பு



(மண்டைதீவு)

மண்டைதீவு மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதற்காக அபிவிருத்திக்குழுவொன்று நியமிக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த 14ஆம் திகதி மண்டைதீவுக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மண்டைதீவு புனித பேதுரு வானவர் ஆலய முன்றலில் இடம்பெற்ற யு.என்.டி.பி. அமைப்பினால் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மண்டைதீவில் மின்சாரம், மருத்துவம், குடிநீர், கடல் அணை புனரமைப்பு எனப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவற்றை படிப்படியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக மண்டைதீவு மக்களை உள்ளடக்கிய அபிவிருத்திக் குழு ஒன்றை உருவாக்கவுள்ளேன். இதற்கு மேலாக மண்டைதீவு கிராமத்தின் அபிவிருத்திப் பணிகள், வேலைவாய்ப்பு போன்றவற்றிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (ந)

# தமிழகத்திலும் வன்முறையைத் தூண்ட சிலர் பேசுகின்றனர்; எழுதுகின்றனர்

## அமைச்சர் ப.சிதம்பரம் கருத்து

(சென்னை)

தமிழகத்தில் வன்முறையை ஏற்படுத்தும் வகையில் சிலர் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். இதனால் தமிழகத்திலும் வன்முறை ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வன்முறையை தூண்டும் வகையில் பேசியதற்காக ஒருவரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கும் நிலைக்கு தமிழகம் வந்துள்ளது.

பேச்சிலும் எழுத்திலும் வன்முறை இருந்தால் செயலி லும் வன்முறை வந்துவிடும். இதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

இந்தியாவிலும் தமிழகத்திலும் வன்முறை தலைதூக்க காங்கிரஸ் ஒருபோதும் அனுமதிக்காது. காங்கிரஸ் தோழர்கள் இதற்கு பூரண ஒத்துழைப்பு அளிக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமான் கடந்த 10ஆம் திகதி சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அருகே ஆர்ப்பாட்டம் செய்தார்.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொல்வதைக் கண்டித்தும், இலங்கையில் போர்க்குற்றம் குறித்து விசாரிக்க ஐ.நா. நியமித்துள்ள குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நாடுகளைக் கண்டித்தும் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், சீமான் ஆற்றிய உரை தொடர்பிலேயே அமைச்சர் ப.சிதம்பரம் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார். (ந-5)

# நிலக்கண்ணிகளை அகற்ற தேசிய மத்திய நிலையம்

(கொழும்பு)

நிலக்கண்ணி அகற்றும் பணிகளை கையாள்வதற்கான தேசிய மத்திய நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு அப்பணி துரிதப்படுத்துவதுடன் மீள்குடியேற்றப் பணிகளை மிக விரைவில் துரிதப்படுத்தவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய றம்புக்வெல தெரிவித்தார்.

மேற்படி பிரதேசங்களில் உள்ள 440 கிராமங்களில் சுமார் 15 இலட்சம் நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அதை துரிதப்படுத்தாமல் மீள் குடியேற்றத்தில் ஈடு பட முடியாது. எனவே மீள்குடியேற்றத்தை விரைவு படுத்தவே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ந-5)

# எரிபொருட்கள் இறக்கும் பணி 24 மணி நேரமும் நடக்கும்

## பெற்றோலிய அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

கப்பல்கள் மூலம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்கள் கடற்படையினரின் பாதுகாப்புடன் 24 மணி நேரமும் கரையேற்ற பெற்றோலிய வள அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பு நிலைமை காரணமாக இதுவரை காலமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப்பகுதியில் மாத்திரமே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஒரு கப்பலுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையில் தாமதக் கட்டணம் வழங்கப்பட்டு வந்தது. இந்தநிலைமை இனிமேல் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எரிபொருட்கள் இறக்கப்படும் நடவடிக்கையை நேரில் பார்வையிடுவதற்காக பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன உள்ளிட்ட குழுவினர் நேற்று கொழும்பு துறைமுகத்துக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## செயல்களம்



காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.சோம்பல் உதவாது. பொறாமையையும் ஆணவத்தையும் பற்றிய கருத்தை எல்லாம் ஒரேயடியாகத் தூர எறிந்துவிடு. முழு வலிமையோடு செயல் புரிவதற்கான ஆர்வத்துடன் செயல்களத்திற்குவா. வேறு கவலை ஏன்? இறைவனே வழிகாட்டுவான்.

எதனையும் பரபரப்புடன் செய்வது கூடாது. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இந்த மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை.அனைத்திற்கும் மேலாக அன்பு தேவை.தேவையற்ற பரபரப்பு வேண்டாம். தன்னை அடக்கப் பழகியவன் வெளியே எதற்கும் வசப்படமாட்டான். அவனுக்கு அதன்பின் அடிமைத்தனம் இல்லை. அவனது மனம் விடுதலை பெற்றுவிட்டது. அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழும் தகுதி பெற்றவன்.

# எயிட்ஸ் நோயை தடுக்கும் மருந்து; அமெ.விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

எயிட்ஸ் நோயை ஏற்படுத்தும் எச்.ஐ.வி. கிருமிகளின் வளர்ச்சியை 90 சதவீதம் தடுக்கும் இரண்டு தடுப்பு மருந்துகளை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

உலகம் முழுவதும் 2008 ஆம் ஆண்டு நிலவரப்படி 3.34 கோடி எயிட்ஸ் நோயாளிகள் உள்ளனர். உயிர்க் கொல்லி நோயான எயிட்சுக்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சிகள் உலகின் பல நாடுகளிலும் தொடர்கின்றன. இந்த நிலையில் அமெரிக்க தேசிய அலர்ஜி மற்றும் தொற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் எயிட்சை எதிர்க்கும் எதிர்ப்பு சக்தியை அளிக்கக் கூடிய 2 மருந்துகளை கண்டுபிடித்துள்ளது.

இதுபற்றி நிறுவன தலைவர் அந்தோணி பாஸி கூறுகையில், ''கடந்த 20 ஆண்டுகளாக எயிட்சுக்கு மருந்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிகள் நடக்கின்றன. சிறிய அறிகுறி கூட கிடைக்கவில்லை. தடுப்பு மருந்துக்கான முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. ஆனால் கடந்த 2 ஆண்டுகளில் எயிட்ஸ் நோயாளிகள் உடலில் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் 2 மருந்துகள் நம்பிக்கை அளிக்கின்றன'' என்றார்.

தாய்லாந்தில் கடந்த ஆண்டில் 16 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்ட மருந்து எதிர்ப்பு சக்தியை அதிகரித்தது. இதனால் எயிட்சுக்கு தடுப்பு மருந்து தயாரிப்பது சாத்தியம்தான் என்ற நம்பிக்கை வந்துள்ளது. எயிட்ஸ் நோயாளியின் உடலில் 2 தடுப்பு மருந்து களை இணைத்து செலுத்தினால் எச்.ஐ.வி கிருமிகள் வளர்ச்சியை 90 சதவீதம் தடுக்க முடியும் என தெரிய வந்தது என்றும் பாஸி தெரிவித்துள்ளார்.

இந்த முன்னேற்றங்கள் பற்றி வியன்னாவில் நடைபெற உள்ள 18 ஆவது சர்வதேச எயிட்ஸ் மாநாட்டில் விளக்கப்படும் இதனால், எயிட்சுக்கு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகளுக்கு ஊக்கம் கிடைக்கும். எனினும் முற்றிலும் எயிட்சை தடுக்கக் கூடிய குணப்படுத்தக் கூடிய மருந்து எப்போது சாத்தியமாகும் என தெரியவில்லை. (6)

# ஆனையிறவு உப்பளத்தை மீள இயங்க வைக்க நடவடிக்கை

இலங்கையின் பாரிய உப்பு உற்பத்தி ஸ்தாபனமான ஆனையிறவு மற்றும் குறிஞ்சாதீவு உப்பளங்களை மீள இயங்க வைத்து உப்பு உற்பத்தியை ஆரம்பிப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழிலுள்ள அமைச்சரின் பணிமனையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஆனையிறவு உப்பளத்தில் பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் பங்குகொண்டனர்.

ஆனையிறவு மற்றும் குறிஞ்சாதீவு உப்பளங்களில் உப்பு உற்பத்தியை ஆரம்பிப்பது தொடர்பாக சாத்திய வள ஆய்வினை உடனடியாக ஆரம்பிக்குமாறு பணிப்புரை வழங்கிய அமைச்சர் பாதுகாப்பு தரப்பினருடன் தொடர்பு கொண்டு கண்ணிவெடி அபாயமுள்ள மற்றும் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்கள் குறித்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளரை கேட்டுக் கொண்டார்.

சுமார் ஆயிரத்து எழுநூறு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட ஆனையிறவு உப்பளத்தில் ஆரம்பகட்ட உப்பு உற்பத்தி மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் குறித்தும் சாத்திய வள ஆய்வில் கவனம் செலுத்துமாறும் அமைச்சர் அறிவுறுத்தினார். குறிப்பாக முன்னாள் உப்பள அலுவலர்களையும் ஊழியர்களையும் உப்பளத்திற்கு நேரடியாகவே சென்று பார்வையிட்டு நிலைமைகளை அறிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்ட அவர் தற்சமயம் ஆனையிறவின் உப்பளங்களில் விளைந்துள்ள சமையல் பாவனைக்கு ஏதுவல்லாத பெருமளவு உப்பினை இரசாயன மற்றும் உற்பத்திக்காகப் பயன்படுத்துமாறும் ஆலோசனை வழங்கினார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உப்பளங்களில் ஆனையிறவு உப்பே தரமானதும் வெண்மையானதுமானதும் என புகழ் பெற்றிருப்பது விசேட அம்சமாகும். மேலும் இவ்வுப்பளமானது மீண்டும் தனது உற்பத்தியினை ஆரம்பிக்கவிருக்கும் நிலையில் ஆயிரக்கணக்கானோர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (6)

# வல்லை நெசவாலையினை மீண்டும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இயங்கிய புகழ்பெற்ற நெசச்சாலைகளுள் ஒன்றான வல்லை நெசவாலையினை மீண்டும் இயங்கவைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

1959 ஆண்டு ஆரம்பித்து சிறப்பாக இயங்கிவந்த வல்லை நெசவாலையானது வடபகுதியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 1985 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் முற்றாக அழிவடைந்து தனது தனது செயற்பாட்டினை இழந்தது.

இந்நிலையில் தற்சமயம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சராக டக்ளஸ்தேவானந்தா பதவியேற்றுள்ள நிலையில் பலதரப்பினராலும் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்திய அமைச்சர் மீண்டும் வல்லை நெசவாலையினை இயங்க வைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

வல்லை நெசவாலையின் தலைவரான சி.சண்முகராசா, உபதலைவர் பா.கிருஷ்ணகுமார் ஆகியோருடன் விரிவாகக்க கலந்துரையாடிய அமைச்சர் மீண்டும் நெசவாலையினை ஆரம்பிப்பதற்குரிய சாதகமான நிலையினைக் கண்டறிந்ததுடன் ஆரம்ப முதலீட்டுத் தொகையாக ரூபா ஒரு இலட்சத்தினை அன்பளிப்பாகவும் வழங்கினார். இதன் தொடர்ச்சியாக தமது அமைச்சினூடாகவும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களினூடாகவும் உரிய உதவிகள் மற்றும் ஒத்தாசைகள் தொடர்ந்து வழங்கப்படும் என உறுதியளித்த அமைச்சின் செயலாளர் சிவஞான சோதிக்கும் உரிய பணிப்புரைகளை வழங்கினார்.

வல்லை நெசவாலையானது மீண்டும் தனது உற்பத்திகளை ஆரம்பிக்கும் நிலையில், நெசவினை தமது வாழ்வாதாரமாகக் கொண்ட பல குடும்பங்கள் பயனடைவதுடன் பெருமளவிலானோர் வேலைவாய்ப்பினையும் பெற்றுக்கொள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (6-2)

# வடகடல் நிறுவனத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பது குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்திற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டார்.

அங்கு விஜயம் செய்த அமைச்சரை வடகடல் நிறுவனத் தலைவர் பரந்தாமன் மற்றும் அதிகாரிகள் ஊழியர்கள் ஆகியோர் வரவேற்றனர். வட பகுதி கடற்றொழிலுக்குரிய உற்பத்திப் பொருட்களை உள்ளூரிலேயே பெற்றுக் கொடுக்கும் முகமாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னர் புனர்வாழ்வு அமைச்சராக பதவி வகித்தபோது அவரின் பெரு முயற்சியின் காரணமாக 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதே வடகடல் நிறுவனம் ஆகும்.

வடகடல் நிறுவனத்தின் தற்போதைய செயற்பாட்டு நிலவரங்களை அதன் பிரதிப் பொதுமுகாமையாளர் கேதீஸ்வரன் நீண்ட விளக்கத்தின் மூலம் எடுத்துரைத்த அதே வேளை, அதன் எதிர்கால மற்றும் மேம்பாட்டு செயற்றிட்டங்களை மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் கேதீஸ்வரன் எடுத்துக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து நிறுவனத்தினை இலாபமீட்டும் வகையில் மாற்றியமைப்பது குறித்தும் அதிகூடிய வினைத்திறனை வெளிக்காட்டும் வகையில் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பது குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆய்வுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இவை தொடர்பாக அமைச்சின் செயலாளருக்கும் வடகடல் நிறுவன உயரதிகாரிகளுக்கும் உரிய பணிப்புரைகளை வழங்கிய அமைச்சர் திறைசேரி உட்பட சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆயுத மோதல்கள் காரணமாக முற்றாக பின்னடைவு பெற்ற நிறுவனமானது அமைச்சர் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக தனது உற்பத்தியை மீள ஆரம்பித்துள்ளதுடன் 2009 ஆம் ஆண்டு 40 மெற்றிக் தொன் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்ததுடன் 2012 ஆம் ஆண்டில் அவ்வுற்பத்தியை 80 மெற்றிக் தொன்னாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கடற்றொழில் படகு உற்பத்தியும் வடகடல் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (6-2)

# சூரிய சக்தியைப் பயன்படுத்துவதில் புதிய முறைகளை கண்டறிய வேண்டும்

## அப்துல் கலாம் வலியுறுத்தல்

சூரிய சத்தியை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் புதிய முறைகளை கண்டறிய வேண்டும் என சத்திய மங்கலம் கல்லூரி விழாவில் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து உரையாற்றுகையில் அணுக்களின் பரிமாற்றம் குறித்து பாஞ்சாலி சபதம் என்னும் நூலில் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

அவரை ஒரு விஞ்ஞானி எனக் கூறலாம். சூரியன் பூமியைச் சுற்றி வருவது போல வாழ்க்கையில் நாம் நிலைத்து நிற்க விடா முயற்சியுடன் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். கல்லூரி வாழ்க்கைப்பருவம் ஒரு முக்கியமான கட்டமாகும். அப்போது நாம் கற்கும் கல்வியே, வாழ்க்கையில் முன்னேற வழி வகுக்கும். ஒருவரது வாழ்க்கையின் 20வயதுக்குள் பெற்றோர், ஆரம்பக்கல்வி கற்றுத் தந்த ஆசிரியர் ஆகியோர் தம் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

நல்லறிவு, நல்நோக்கம் கடின உழைப்பு இருந்தால் வெற்றி நிச்சயம். புதிய கண்டு பிடிப்புகளுக்கான தேடல் மிக முக்கியம். சிந்தனை, நல்லறிவு ஆகியவையே ஒருவரை மானாக திகழச் செய்யும் நாம் செய்யும் பணியில் ஈடுபாடும் கடின உழைப்பும் இருந்தால் வெற்றி எளிதாகும். ஒரு செயலை மேற்கொள்ளும் போது ஏற்படும் தடைகளை கடந்து வெற்றி பெறும். மனப்பக்குவத்தை வளர்க்க வேண்டும் நாம பிறந்தோம். வளர்ந்தோம் என்றில்லாமல் நாம் மறைந்த பிறகும் நமது பெயர் நிலைத்திருக்கும் விதத்தில் நமது செயல் இருக்க வேண்டும் நாட்டின் வளர்ச்சிக்கு அவை உதவவேண்டும்.



பூமி வெப்பமயமாதல், தட்பவெப்ப மாற்றம் ஆகியவற்றை நாம் உணர்ந்து அவற்றை தடுக்கும் வழி முறைகளை ஆராய வேண்டும் மாணவ பருவத்தில் ஆராய்ச்சி முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒருநாட்டின் முன்னேற்றத்திலும் இதுவே முக்கிய பங்கு வகிக்கின்றது. இதற்கு அடித்தளம் கல்லூரி வாழ்க்கை. ஒவ்வொரு கல்லூரியும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள மாணவர்களுக்கு முழுமையாக உதவ வேண்டும். இதன்மூலம் கண்டு பிடிப்புத் திறன் அதிகரிக்கின்றது. விவசாய உற்பத்தி அதிகரிக்கவேண்டும். எதிர்காலத் தேவையை உணர்ந்து இளைய தலைமுறை செயல்பட வேண்டும். விண்வெளி ஆராய்ச்சித் துறையில் வரும் 10 முதல் 15 ஆண்டுகளுக்குள் மிகப் பெரும் வளர்ச்சி ஏற்படும். சூரிய சக்தியை பயன்படுத்துவதில் புதிய முறைகளைக் கண்டறிய வேண்டும். கண்டுபிடிப்புத் திறன் மிக முக்கியம். எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்களுக்குள் சோலார் மற்றும் அணுசக்திப் பயன்பாடு மிக அதிகமாகும். சோலார் பவர் சட்டலைட் அமைக்கும் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இதில் எனது பங்கும் உள்ளது என்றார். (6)

# பரணவிதாரண, சங்கா சதமடித்தனர்

# இலங்கை அணி வலுவான ஆரம்பம்

## முதல்நாள் ஆட்டம் சீரற்ற காலநிலையால் பாதிப்பு



(காலி)

பரணவிதாரண, சங்கக்கார சதம் அடித்து அசத்த இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 256 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் வந்துள்ள இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் நேற்றுக் காலி சர்வதேச அரங்கில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணிக்குப் பரணவிதாரண-டில்சான் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கியது.

இதில் திலகரட்ண டில்சான் 24 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 25 ஓட்டங்களை எடுத்து மிதுனின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 55 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்து.

அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த பரணவிதாரண-சங்கக்கார ஜோடி சிறப்பான ஆட்டத்தை வழங்கினர்.

இதில் பரணவிதாரண தனது 100-வது பந்திலும் அணித் தலைவர் குமார் சங்கக்கார தனது 79-வது பந்திலும் அரைச் சதம் கடக்க இலங்கை அணி 150 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடியைப் பிரிக்க இந்திய அணித் தலைவர் தோனி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்கவில்லை.

இதில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அணித் தலைவர் குமார் சங்கக்கார 136-



வது பந்தில் தனது 22-வது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

இந்த ஜோடி 2-வது விக்கெட்டுக்காக 51 ஓவர்களில் 171 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது அணித் தலைவர் குமார் சங்கக்கார 145 பந்துகளில் (12 பவுண்டரிகள் உட்பட) 103 ஓட்டங்களை எடுத்துச் சேவாக்கின் பந்து வீச்சில் டெண்டுல்கரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய மஹேல ஜெயவர்த்தன நிதானதாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பரணவிதாரண 201-வது பந்தில் டெஸ்டில் தனது கன்னிச் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந் நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. தொடர்ந்து மழை காரணமாக தாமதமாக நேற்றைய ஆட்டம் 68 ஓவர்கள் மட்டும் வீசப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டது. இந் நிலையில் இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களையிழந்து 256 ஓட்டங்களை எடுத்தது.



இதில் பரணவிதாரண 110 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 8 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்து வீச்சில் மிதுன், சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இந்தியாவுடனான டெஸ்ட் வெற்றி முரளிக்குப் பிரியாவிடைப் பரிசு

## அணித் தலைவர் சங்கக்கார தெரிவிப்பு

(காலி)

இந்திய அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில் திறமையாக விளையாடி வெற்றி பெற்றுக்கொடுப்பதே முரளிதரனுக்கு கொடுக்கும் மிகச்சிறந்த பிரியாவிடைப்பரிசு என இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் நேற்று ஆரம்பமானது. இந்த டெஸ்ட் போட்டியுடன், ஓய்வுபெறப்போவதாக இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அறிவித்திருந்தார்.

போட்டி ஆரம்பமாவதற்கு முன் இது தொடர்பில் கருத்து தெரிவித்த அணித்தலைவர் குமார் சங்கக்கார, முரளிதரன் விடைபெறுகின்றார் என்பதற்காக சோர்ந்துவிடாமல் சிறப்பாக விளையாட வேண்டும். இதில் வெற்றி



பெற்று அந்த சாதனையை முரளிதரனுக்கு பரிசாகக் கொடுப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முரளிதரன் சவால்மிக்க பந்துவீச்சாளர் தான். நிதானமாக விளையாடி வெற்றிபெறுவோம் என இந்திய அணித் தலைவர் தோனி ஏற்கனவே கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணித் தலைவர் தோனி கொழும்பில் அசினைச் சந்தித்தார்

இந்திய அணித் தலைவர் தோனியின் திருமணம் திடீரென்று நடைபெற்றது. நடிகை அசின் விவகாரம் தான் தோனியின் இந்தத் திடீர் திருமணத்திற்குக் காரணம் என்று பரபரப்பாகப் பேசப்பட்டது.

இந் நிலையில் இலங்கையில் அசினும் தோனியும் சந்தித்துள்ளனர். சமீபத்தில் ரெடி ஹிந்திப் படத்தின் சூட்டிங்கிற்காக இலங்கை வந்த அசின் கொழும்பிலுள்ள நட்சத்திரக் ஹோட்டலில் தங்கியுள்ளார்.

இலங்கை அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட இந்திய அணியும் கடந்த வாரம் இலங்கை வந்தது.

அசின் தங்கியிருந்த அதே ஹோட்டலில் தோனியும் தங்கியுள்ளார். அப்போது இருவரும் சந்தித்துப் பேசியுள்ளனர். இது குறித்து அசின் தெரிவிக்கையில்,

இலங்கையிலிருந்து நேற்று முன்தினம் தான் மும்பை வந்தேன். நான் தங்கியிருந்த ஹோட்டலில்தோனியும்தங்கியதுஉண்மைதான்.



நாங்கள் இருவருமே நண்பர்கள். அவரது திருமணத்திற்குப் போக முடியவில்லை. அதனால் நேரில் அவரைச் சந்தித்து வாழ்த்தலாம் என இருந்தேன்.

அவரே இலங்கைக்கு வந்தது மகிழ்ச்சியளித்தது. அவரைச் சந்தித்துத் திருமண வாழ்த்துக் கூறினேன். ஹோட்டலில் அவர் மட்டுமல்ல; மொத்த இந்தியக் கிரிக்கெட் அணியும் தங்கியிருந்தன.

# மூன்றாவது முறையாக தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியன்

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவினால் நடத்தப்பட்ட யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் மற்றும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் 92 புள்ளிகளைப் பெற்ற தெல்லிப்பழை பிரதேச செயலகம் மூன்றாவது தடவையாகவும் மாவட்ட சம்பியனானது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் தடகளப் போட்டிகள் கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்றன.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, வட வலய மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா, இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் யாழ்ப்பாணத் திட்ட முகாமையாளர் க. மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மைதானத்தில் தேசியக் கொடி, மாவட்ட, மாகாணக் கொடிகளுடன் ஒலிம்பிக் கொடியும் ஏற்றப்பட்டன. ஒலிம்பிக் தீபம் விளையாட்டு வீர, வீராங்கனைகளால் மைதானத்தைச் சுற்றி எடுத்து வரப்பட்டு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து வீரர்கள் சார்பில் சோபனும், நடுவர்கள் சார்பில் பேட்டி பனிஸ்ரரும் சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டதைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

நாட்டில் சாந்தி, சமாதானத்திற்காக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் யாழ்.மாநகர சபை முதல்வரும் வெள்ளைப் புறாவைப் பறக்க விட்டனர்.

அனைத்துப் போட்டிகளின் நிறைவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் 92 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் 72 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் நல்லூர், பருத்தித்துறைப் பிரதேச செயலகம் 47 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் உடுவில் பிரதேச செயலகம் 44 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் 24 புள்ளிகளைப் பெற்று ஆறாம் இடத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலகம் 24 புள்ளிகளைப் பெற்று ஏழாம் இடத்தையும் கோப்பாய் பிரதேச செயலகம் 10 புள்ளிகளைப் பெற்று எட்டாம் இடத்தையும் சங்கானைப் பிரதேச செயலகம் 7 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாம் இடத்தையும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு 5 புள்ளிகளைப் பெற்று பத்தாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# ஆகக் குறைந்த கட்டணம் ரூ.2 எதிர்த்து எயார்டெல் வழக்கு

செல்லிடத் தொலைபேசிகளில் வெளிச் செல்லும்அழைப்புக்களுக்குஆகக்குறைந்த கட்டணமாக நிமிடத்திற்கு இரண்டு ரூபாய் அறவிடவேண்டும் என்ற தீர்மானத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் பார்த்தி எயார் டெல் நிறுவனம் வழக்கு தொடுத்துள்ளது.

செல்லிடத் தொலைபேசித்துறையினர் எதிர்கொள்ளும்நட்டத்தை கருத்தில் கொண்டு, வெளிச் செல்லும்அழைப்புக்களுக்கு ஆகக்குறைந்த கட்டணமாக இரண்டு ரூபாய் அறவிட வேண்டும்என்று இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வியாழனன்று அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1989 ஆம் ஆண்டு செல்லிடத் தொலைபேசிகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்ட பின்னர்இத்துறையினர் முதல்தடவையாக கடந்தவருடம் 2300 கோடி ரூபாய் நஷ்டத்தை எதிர்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இலங்கையில் செயற்படும் செல்லிடத்தொலைபேசி சேவை நிறுவனங்களின் ஒன்றான பார்த்தி எயார் டெல் இத்தீர்மானத்தை எதிர்ப்பதாக அந்நிறுவனத்தின் வணிகத்துறை தொடர்பான பிரதம அதிகாரி யொகான் முனவீர ஏ.எவ்.பி செய்திச் சேவையிடம்தெரிவித்துள்ளார். ஆகக்குறைந்த கட்டணம்என்பதுபாவனையாளர்களின் நலன்களுக்கு எதிரானது என அவர் கூறியுள்ளார். மேற்படி சந்தையில் முன்னிலையிலுள்ள நிறுவனத்திற்கு மாத்திரமே நன்மையளிக்கும் என பார்த்தி எயார்டெல் சமர்பித்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## வேலூர்...

எனவும் கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிகிறது.

சீமான், முருகனின் வாழ்க்கை பற்றியும் குடும்பம் பற்றியும் இயக்கம் பற்றியும் விரிவாக பேசியுள்ளார் என தெரிகிறது. (ந-5)

## எதிர்க்கட்சித் தலைவர்...

சஜித்பிரேமதாஸசந்திக்கவிருந்தார்.

எனினும் முன்னதாக தீர்மனிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சிகளின் நிமிர்த்தம், இந்த சந்திப்பை பிற்போட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இதன் போது கட்சியின் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை குறித்து பகுப்பாய்வு செய்வதற்கான நான்கு பேர் கொண்ட குழுவொன்றுஅமைக்கப்படவுள்ளதாக கட்சித்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் மீளமைப்பு குழுவினால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டுள்ள மீள் அமைப்பு அறிக்கை இன்று செயற்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கை தொடர்பாக கலந்துரையாடும் பொருட்டே, இந்தபுதிய குழு நியமிக்கப்படவுள்ளது.

இதற்கிடையில் மீளமைப்புக் குழுவின் அறிக்கை தொடர்பில் இன்று இணக்கப்பாடு ஒன்று காணப் படும் பட்சத்தில் கட்சியின் சம்மேளன கூட்டம் நடத்தப்படும் தினம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் என கூறப்படுகிறது. (ந-5)

## இலங்கை...

பான்மையான இலங்கையின் கிராமப்புற இளைஞர்கள் யுவதிகள் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் தருணத்தில் இவ்வாறு சீனர்களுக்கு தொழில்வாய்ப்பு அளிப்பது எந்த வகையில் நியாயமானதென சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். (ந-5)

## இலங்கையில் தமிழர்...

போதேவைகோ இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு;

இலங்கை போர்க்குற்றங்களை விசாரிக்க நிபுணர் குழு ஒன்றை ஐ.நா.அமைத்தது. அந்தக்குழுவுக்கு இலங்கை பெரும் கண்டனம் தெரிவித்தது.

ஆனால் இந்தியாவின் மத்திய அரசோ, தமிழக அரசோ எவ்வித கருத்தும்தெரிவிக்க வில்லை. இதற்கு முன்பு இலங்கைக்கு அனுப்பப் பட்ட இந்திய பிரதிநிதிகள் தமிழர் களுக்கு ஆதரவாக செயற்பட்டிருக்க வில்லை.

இந்நிலையில் மீண்டும் இலங்கைக்கு சிறப்பு தூதர் அனுப்ப வேண்டும் என்கிற கருணாநிதியின் யோசனை இலங்கைத் தமிழர் பிரச்சினையைத்திசை திருப்பும் நோக்கத்தை கொண்டதாகும் என்றார். (ந-5)

## ஹெகலிய சிந்தனையிலா...

வழங்கியிருந்தார்.

அண்மையில் கிளிநொச்சியில் இடம் பெற்றுமுடிந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்பும் அவர் இவ்வாறான கருத்தையே வெளியிட்டிருந்தார். ஆனால் அமைச்சர் ஹெகலிய றம்புக்வெலவோ உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டாது என்றும் அங்கு மீளவும் இராணுவம் குவிக் கப்படும் என்றும் தனியார் காணிகள் இராணுவ முகாம்களுக்காக தொடர்ந்தும் பயன்படுத்தப் படும் என்றும் சில நாட்களுக்கு முன் கூறியுள்ளார்.

தமிழ்மக்களை தொடர்ந்தும் அச்ச சூழ் நிலையில் வைத்து கொள்கின்றமையை ஹெக லிய விரும்புகிறார் என்பதையே அவரின் கருத்துக்கள் பிரதிபலிக்கின்றன.

யுத்தம் முடி படைந்து ஒரு வருடம் கடந்து விட்டது. இங்கு அமைதியான சூழ்நிலை நிலவுகிறது எனக் கூறும் அரசாங்கம் ஏன் இன்னும் இராணுவ மயமாக்கலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது?

ஹெகலியவின் கருத்துக்கள் மக்கள் மத்தியில் மேலும் அச்சத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளன. ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் அமெரிக்காவின் இராணுவத்தளங்கள் உள்ளன என்றும் அவை வாபஸ் பெறப்படவேண்டும் என்று ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் உள்ள மக்கள் கோரி வருகிறார்கள் என்றும் உதாரணம் காட்டியுள்ள ஹெகலிய அமெரிக்கா அதன் தளங்களைவெளிநாடுகளில்இருந்து வாபஸ் பெறாதபோது உள்நாட்டிலுள்ள பாதுகாப்பு வலயங்களை இலங்கை ஏன் வாபஸ் பெறவேண்டும் என்று கேட்டுள்ளார்.

அப்படியென்றால் அவரிடம் நாங்கள் ஒன்றைச் சொல்கின்றோம். தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் பல்லினமக்களும் ஏற்றுக்கொள் எக் கூடிய அரசியல் தீர்வைப் பெற்று கொடுக்க சுவிஸ், கனடா போன்ற நாடுகளில் உள்ள அரசியல் முறையைபின் பற்றவும் அமைச்சர் ஹெகலிய முன்வர வேண்டும் என்றார். (ந-5)

## குருணா...

படுகொலை செய் திருக்கிறார்கள். கொல்லப்பட்டவர் அவ்விகாரையின் பிரதம விகாராதிபதியான விமலவர்தன தேரர் என்பவர் ஆவார். (ந-5)

## த.தே.கூ...

திப்பின் போது வெளிப்படுத்துவார்கள் என்றும் தெரியவருகிறது. (ந-5)

## ராஜீவ் கூறியதை கேட்டி...

பெருந்தலைவர் காமராஜரின் 108ஆவது பிறந்தநாள் விழா மற்றும் காங்கிரஸ் கட்சியின் 125 ஆவது ஆண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஒருநாடுமுன்னேறவேண்டுமென்றால் அந்த நாட்டில் கலவரமோ, வன்முறையோ இருக்கக் கூடாது.

நமக்கு பிரபாகரன் எதிரானவர் அல்ல. அவர் சென்ற பாதைதான் எதிரானது.நான் பிரபாகரனை நன்கு அறிந்தவன்.

இரவு 12 மணிக்கு எனது காரை நானே ஓட்டிச்சென்று அவர் இருந்த இடத்தில் அவருடன் பல மணி நேரம் பேசியிருக்கிறேன்.

அவர் ராஜீவ்காந்தி கூறியபடி இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் இன்று இலங்கையில் இரண்டு மாநிலங்களில் அவர் முடிசூடா மன்னனாக இருந்திருப்பார்.

ஆனால் நிலைமை வேறாகி விட்டது. இலங்கையில் எத்தனை பேருக்கு பேரிழப்பு; எத்தனையோ பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது இலங்கையில்அமைதிதிரும்பியுள்ளது.

இலங்கை தமிழர் நலனுக்காக இந்தியா 3600 கோடி நிதி உதவி அளித்துள்ளது. அங்குள்ள இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தர 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தையும் பலாலி விமான நிலையத்தையும் சீர்படுத்தித்தர இந்தியா முன் வந்திருக்கிறது. இன்னும் 2 வருட காலத்தில் அங்குள்ள 2 இலட்சம் தமிழர்களுக்கும் வீடு கட்டி கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார். (ந-5)


### பிரதேசசெயலகம் நல்லூர்

'ஆரம்ப, முதல்நிலை, இரண்டாம்' கல்வி நிலையிலுள்ள மாணவர்களுக்கான சமுர்த்தி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும்,நூல் வெளியீடும் 2010

இடம்: நடராசா பரமேஸ்வரி கல்யாண மண்டபம்
நல்லூர் கோவில் வடக்கு வீதி
காலம்: 19.07.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மு.ப.10.00

தலைவர் :பா.செந்தில்நந்தனன்
சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர்,பிரதேச செயலர்,நல்லூர்.

பிரதம விருந்தினர்
கௌரவ அமைச்சர் திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா
பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

சிறப்பு விருந்தினர்கள்
திரு.முருகேசு சந்திரகுமார்(அசோக்)
பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவரும்
யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்
திரு.சில்வேஸ்திரி அலென்ரின்(உதயன்)
யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
திருமதி இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்,மாவட்ட செயலகம்,யாழ்ப்பாணம்.
திரு.தி.மகேஸ்வரகுமார்
சமுர்த்தி உதவி ஆணையாளர்,மாவட்ட செயலகம்,யாழ்ப்பாணம்.
திரு.ரி.செல்வரத்தினம்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,யாழ்ப்பாணம்.
திரு.பா.விக்னேஸ்வரன்
கல்விப்பணிப்பாளர்,கல்வி வலயம்,வலிகாமம்.
திரு.சண்முகராசா இரவீந்திரநாதன்
உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,கல்விவலயம் ,யாழ்ப்பாணம்

கௌரவ விருந்தினர்
திரு.நடராசா சத்தியரூபன்(தொழிலதிபர்)
நடராசா பரமேஸ்வரி கல்யாண மண்டப ஸ்தாபகர்

நூல் வெளியீடு
நூல் வெளியீட்டு உரை
பொருளியல் பேராசிரியர் வி.பி.சிவநாதன் (யாழ்.பல்கலைக்கழகம்)

நிகழ்ச்சி நிரல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- ஆசியுரை:ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்தபரமாச்சார்யசுவாமிகள்(நல்லை ஆதீனம்)
- வரவேற்புரை:திரு.தி.சந்திரகாசன்,தலைமைச் சமுர்த்தி முகாமையாளர்,நல்லூர்.
- தலைமையுரை
- நூல் வெளியீட்டுரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- சான்றிதழ் வழங்கல்
- நன்றியுரை திரு.டி.தயாகரன்,சமுர்த்தி முகாமையாளர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சமுர்த்திப் பிரிவு, பிரதேசசெயலகம், நல்லூர்.

அனுசரணை: சிறி நதியா நகை மாளிகை(யாழ்.)
சிறி நதியா டிஜிற்றல் கலர்லாப்(யாழ்.)

(1882)



aat
கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Tally ஒரிஜினல் சான்றிதழ் எம்மிடமிருந்து மட்டுமே!

Tally Certified Computer Accountant — 2-3 Months
Adhn Advanced Diploma in Hardware & Networking — 3 Months
MSO Diploma in MS Office Application — 2-3 Months
MULTIMEDIA SCHOLARSHIP
மல்டிமீடியா கல்விக்கான ஸ்கொலர்ஷிப் பெற்றவர்கள் 24.07.2010 முன்பாக பதிவுகளை மேற்கொள்ளவும்

ASIAN COMPUTER EDUCATION

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088 | 230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-3213390 |



நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Network Software Engineering
BIT CIMA-UK CCNA MCITP
Government Scholarship
Salary Scale more than 50,000$
www.payscale.com
Free Courses A+ Hardware-Australia BCS-UK English, ICDL, SUN JAVA PROGRAMMER-SCJP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும்,
MCS Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction,Jaffna.
Call 772395895



Mr. Concrete
For all your concrete needs!
SLSI - தரத்திற்கு அமைய நவீன இயந்திரங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டவை.
உங்கள் சகல கொங்கிறீட் தேவைகளுக்கும்
- Concrete Blocks
- Concrete Hollow Blocks
- Columns
- Lintels
- Paving Stones

இலவச விநியோகம்



Sales Office: 124, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் www.MrConcrete.lk
Factory: கொடிகாமம் வீதி, புலோலி. Tel: 0217 222 333
(1850)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.